ஆண்டார்குப்பம் என வழங்கும் ஸ்ரீ சுப்பிரமணியபுரம்

# தல வரலாறு.



உ

சிவமயம்.

ஆண்டார்குப்பம் என வழங்கும்

# ஸ்ரீ சுப்பிரமணியபுரம்

# தல வரலாறு.

---

ஆசிரியர்:

குகஸ்ரீ. ரஸபதி.

தேவஸ்தான வெளியீடு.

1965.

விலை ரூ. 1-00



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்
68-வது பீடம்.

உ

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

# ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமடம்.

காஞ்சீபுரம்.

முகாம் : கிழம்பி (காஞ்சீபுரம்) தேதி 8—7—64

தொண்டை நாட்டில் பொன்னேரியின் ஸமீபத்திலுள்ள ஆண்டார் குப்பமென்னும் ஸுப்ரமணியபுரத்தில் விளங்கும் ஸ்ரீ பாலஸுப்ரமணிய ஸ்வாமி தேவஸ்தானத்தின் வரலாறு டிரஸ்டிகளால் வெளியிடப்பட்டிருப்பதை அறிந்து ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தில் ஸந்தோஷிக்கிறார்கள்.

இவ்வரலாற்றை புராண ஆதாரங்கள், முருகனின் சிறப்பு, பல்வேறு மூர்த்திகளின் பெருமை, த்வஜஸ்தம்பம், கோபுரம், பலிபீடம் முதலிய ஆலயாம்சங்களின் தத்வங்கள், சில்பச் சிறப்புகள், இந்தத் தேவஸ்தானத்தில் பல்வேறு பூஜா கைங்கர்யங்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டளைகளின் விபரங்கள் முதலிய விசேஷங்களுடன், பல ஸ்தல புராணங்களைத் தொகுத்துள்வரும், சிறந்த சொற்பொழிவாளருமான குகஸ்ரீ. ரஸபதி இனிய ரஸமாக விளக்கி யிருக்கிறார்.

ஆஸ்திகர்கள் இந்நூலைப் படித்தும், இத்தலத்தில் விளங்கும் முருகன் முதலிய மூர்த்திகளைத் தரிசித்தும் ஸகல மங்களங்களையும் அடையும்படி ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தில் ஆசீர்வதிக்கிறார்கள்.

ஆக்ஞைப்படி,

(Sd.) M. V. கிருஷ்ணமூர்த்தி அய்யர்,

மானேஜர்.

# அணிந்துரை.

(சென்னை அறநிலை ஆணையாளர்)

**திருமிகு: M. S. சாரங்கபாணி முதலியார், B.A., B.L.,**

**ஆண்டார்குப்பம்** என்பது சென்னைக்கு அணித்தாகப் பொன்னேரிக்கு அருகில் சிறந்து விளங்கும் முருகன் தலம் ஆகும்.

சம்வர்த்தனர் என்னும் பெயருடைய ஓர் அந்தணச் சிறுவனை, இங்கு முருகப்பெருமான் ஆண்டு கொண்டு அருள்புரிந்த காரணத்தால், இத் தலத்திற்கு ஆண்டார் குப்பம் எனப் பெயர் ஏற்படுவதாயிற்று. இத்தலம் சுப்பிர மணியபுரம் என்றும் வழங்குவதுண்டு.

திருப்புகழ் பாடிய ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள், சைவ சித்தாந்த ஞானானுபூதிச் சான்றோர் ஆகிய ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள், அருட்கவி அருணாசல அரனடிகள், பெரும்புலவர் மணவழகர் முதலிய பெருமக்கள் பலர், இத் தலத்தைத் தரிசித்து, இங்கு எழுந்தருளியுள்ள ஸ்ரீ பாலசுப் பிரமணியப் பெருமானைத் துதித்துப் பாடிப் பரவியுள்ளனர்.

இடைக்காலத்தில் சிறிது விளக்கம் குன்றியிருந்த இந்த முருகன் தலம், இப்போது அண்மையிற் சில காலமாக மிகவும் பிரசித்தி பெற்று விளங்கத் தொடங்கியுள்ளது. அன்பும் ஆர்வமும் மிக்க பெருமக்கள் பலருடைய அரிய தொண்டு களின் பயனாக, இங்குப் பல சிறந்த திருப்பணிகள் செய்யப் பெற்றுள்ளன. மேலும் பற்பல நடைபெற இருக்கின்றன. வழிபடும் பக்தர்களின் திரளும் பெருகிக் கொண்டு வருகின்றது.

இத்தகைய சிறப்புமிக்க இந்தத் தலத்தின் வரலாற்றைத் தமிழ்ப் பேரறிஞர் குகஸ்ரீ. ரசபதி அவர்கள், சுவைமிக எளிய இனிய நடையில் எழுதி யுதவி யிருக்கின்றார்கள். இத் தலத்தைப் பற்றிய பல துதிப்பாடல்களும் அழகிய பல படங் களும் நூலின்கண் சேர்க்கப் பெற்று, நூலினை மிக மிக அணிசெய்கின்றன.

**ஸ்ரீ ஆண்டார் குப்பம் தேவஸ்தானத்தார்** வெளியிடும் இத் தலவரலாற்று நூல், அன்பர்கள் அனைவருக்கும் பெரிதும் பயன்படும்.

சென்னை,
17—11—64.

**மா. சே. சாரங்கபாணி.**

முருகன் துணை.

## திரு: D. இராமலிங்க ரெட்டியார், M.A., B.L.,

துணை ஆணையர்

இந்துமத அறநிலய ஆட்சித் துறை அவர்கள்

# பாராட்டுரை.

---

ஸ்ரீ ஆண்டார்குப்பம் ஒரு சிறந்த சுப்பிரமணிய க்ஷேத்திரம். இது பொன்னேரிக்கும் பெரிய பாளையத்திற்கும் அருகில் இருக்கின்றது. இந்த ஸ்தலத்திற்கு ஸ்ரீ அருணகிரிநாதர் திருப்பாடலும் உண்டு. மற்றும் பல மகான்களும் இங்கே வந்து பாடல்கள் பாடி யிருக்கின்றனர்.

சமீப காலமாக இது பிரசித்தி பெற்ற ஸ்தலமாக ஆகி யிருக்கின்றது. இதன் வருமானமும் பெருகி யிருக்கின்றது. அதனால் நம் இலாகாவின் "லிஸ்டெட்" தேவஸ்தானங்களில் இதுவும் ஒன்றாக ஆகி யிருப்பது நாம் சந்தோஷப்பட வேண்டிய சமாசாரம் ஆகும்.

சென்னை பெரும்புலவர் குகஸ்ரீ. ரஸபதி அவர்கள் சிறந்த முறையில் சுலபமான நடையில் மதுரம் பெருக இந்த ஸ்தல சரித்திரத்தை எழுதி யளித்திருக்கின்றார்கள். இதனைத் தேவஸ்தானத்தார் வெளியிடுவது அறிந்த நான் என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்

டி. இராமலிங்க ரெட்டியார்.

உ

ஸ்ரீபாலசுப்ரமண்யம் துணை.

### ஆண்டார்குப்பம் தேவஸ்தானம் மானேஜிங் டிரஸ்டி

### திரு: கு. செ. ஆறுமுகம் செட்டியார் அவர்கள்

# முகவுரை.

---

இறைவன் திருவருள் எளிய என்னை யீர்த்தது. ஆண்டார் குப்பம் ஸ்ரீ பாலசுப்ரமண்யர் தேவஸ்தானத்தை நிர்வகிக்கும் பொறுப்பை அளித்தது. அன்று முதல் இயலும் திருப்பணியில் மனமுவந்து ஈடுபட்டேன் இன்று பெருமானைச் சேவிக்கும் அன்பர்கள் அடியேன் திருப்பணி கண்டு செய்யும் ஆசியைப் பெரும் பேருக எண்ணுகிறது எனது மனம். குடமுழுக்கு விழா நிகழ்த்திக் குதூகலித்தேன். பரணி கிருத்திகை, பிரமோற்சவ காலங்களில் திரளாக வரும் பக்தகோடிகளைப் பார்க்கும் போதெல்லாம், அடியேன் திருப்பணியை ஏற்றுக் கொண்டான் எம்பெருமான் என்று நம்புகிறேன்.

பல அன்பர்கள் தலவரலாறு வேண்டும் என்று விரும்பினர். அவர்கள் நினைவை நிறைவேற்றும்படி, பன்னூல் ஆசிரியரான குகஸ்ரீ. ரஸபதி அவர்களிடம் குறிப்பித்தேன். அவர்கள் அதை உடனே விரைந்து எழுதி உதவினர். இந் நூலை எளிதாகத் தம்செலவில் திருவள்ளூர் சக்தி அச்சகத்தார் பதித்து அளித்தனர். இப்பணியைப் பாராட்டி காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள், இந்துமத அறநிலைய ஆட்சியிலுள்ள ஆணையர் திருமிகு. **M.S.** சாரங்கபாணி முதலியார். B.A., B.L., அவர்கள் துணை ஆணையர் **D** இராமலிங்க ரெட்டியார், M.A., B.L., அவர்கள் முதலினோர் ஆசியுரை வழங்கினர்.

இத்துணையும் தெய்வப் பெருமான் திருவருள் உதவுதல் என்று எண்ணும் போதெல்லாம் இறும்பூது அடைகிறேன்.

ஆசியுரை வழங்கிய மேலோர்கட்கும், எழுதி உதவிய ஆசிரியர்க்கும், இலவசமாக அச்சிட்டுதவிய திருவள்ளூர் சக்தி அச்சகத்தார்க்கும், ஸ்ரீபாலசுப்ரமண்யப் பரமன் திருவருளால் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு நேர்க என்று இதயபூர்வமாக இறைஞ்சுகிறேன்.

இங்ஙனம்,

கு. செ. ஆறுமுக செட்டியார்.

தெய்வமே துணை.

# முன்னுரை.

---

உலகெலாம் திருவருளை உணர்கிறது. அந்தப் பயன் தான், எங்கும் உள்ள ஆலயங்கள். இறைவன் திருக்கோயில் தத்துவங்கள் எண்ணிறந்தன.

வாழுமாறு முன்னோர் வகுத்த வழிபாட்டு முறைகளை, வரலாற்று நூற்களை, அமைதியொடு ஆய்வம்; அவைகளை அன்பர்கட்கும் அறிவிப்பம் என்று, என்றும் எண்ணம் கொள்பவன் எளியேன்.

பிரமஸ்ரீ. சு. முத்துஸ்வாமி ஐயர் அவர்கள், பிரமஸ்ரீ. திருப்புகழ் டாக்டர் மணி ஐயர் அவர்கள் அன்பொடு பதினாறு ஆண்டுகளாக நடத்திவரும் தெய்வீக மாத இதழான அமிர்தவசனியில், மூன்று ஆண்டுகட்கு முன், 'சால்புள சம்வர்த்தனர்' எனும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினேன். அதைப்படித்த அன்பர்கள் பலர், ஆண்டார் குப்பத்து அற்புதம் மறக்க முடியாதவை என்று ஆநந்தக் கண்ணீர் பெருக்கிச் செய்த பாராட்டுகளை, எண்ணும் போதெல்லாம் எனது இதயம் நெகிழும்.

இதனை யடுத்து, இந்து அறநிலயப் பாதுகாப்புத் துறை உதவி ஆணையாளர் உயர்திரு: T. H. விவேகாநந்தம் பிள்ளை, B A., L.T. அவர்கள், பரமனது ஆண்டார்குப்பத் தல வரலாற்றை எழுதுங்கள் என்று பணித்தார்கள். எடுத்த செயலை, இடையருது முயன்று, நிறைவேறும்வரை அதே நினைவுடன் இருக்கும் இன்றைய விறல்மிண்டர் என்று அவர்களை எண்ணுபவன் அடியேன்.

சென்னை கந்தகோட்டம் ஸ்ரீ. முத்துக்குமாரஸ்வாமி தேவஸ்தானம், ஸ்ரீ ஆண்டார்குப்பத்தொடு கைங்கர்யத்தில் தொடர்பு கொண்டது. கந்த கோட்டத் தல வரலாற்றை எழுதுக என்று, அத்தேவஸ்தான தர்மகர்த்தர்கள் அன்பு முகம் காட்டி அறிவித்தனர். அவ் வரலாறுகளைத் தேடித் தொகுத்தபின், அந் நூலை அச்சிற்பதித்து அரங்கேற்றிய திரு. தர்மகர்த்தர்கள், வண்மையிற் சிறந்த பேரி வைசியப் பேருணர்விற்குத் தக்கபடி, எளிய எற்குப் பொன்னுடை போர்த்திக் காட்டிய அன்பின் பண்பை, என்றும் மறவாது எனது மனம்.

இவைகளின் இடையில், திருச்செந்தூர் தலபுராண விரிவுரை எழுதினேன்; அத்தல நிர்வாகிகள் அந்நூலைப் பதித்து அரங்கேற்றினர்.

அந்நாளில் ஸ்ரீதேவிபட்டினத்தில் விஜயம் செய்திருந்த காஞ்சி காமகோடிபீடம் ஜகத்குரு. ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள், அப்புராணப் பதிப்பை அருளொடு நோக்கி, உரைக்குறிப்புக்களில் உகப்புக் காட்டி, 'உலகம் பொன்னுடைகளையே இன்று முதல் உனக்குப் போர்த்துவதாக! இத்திருப்பணி என்றும் நின்னில் இயைவதாக' என்று, விலையுயர்ந்த பொன்னுடை போர்த்திச் செய்த பேராசியால், உடலம் புளகிதம் எய்தியது. இனி நமக்குப் பிறவியில்லை என்னும் உணர்வொடு, கண்ணீரை அவர்கள் திருவடிகட்குக் காணிக்கையாக்கினேன்.

திருச்செந்தூர் புராண மந்திர மகிமையுரைத்த சருக்கத்திற்கும், ஆண்டார் குப்பத் தலவரலாற்றிற்கும் தூய கருத்தில் தொடர்புளது எனவையறிந்து மகிழ்ந்து இன்புற்றேன். 'என் செயலால் ஆவது யாதொன்றும் இல்லை, வாய்மைத் திருவருட் சக்தி, ஆத்மீக வாழ்விற்கு எவர்க்கும் வழிகாட்டிக் கொண்டிருக்கிறது. அவைகளுள் இதுவும் ஒன்று என்று, அன்பர்கள் அறியுமாறு இவ்வளவும் அறிவித்தேன்.

ஸ்ரீ ஆண்டார் குப்பத் தலவரலாறு, ஓரளவு நிறைவு பெற்றது, ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள், புல்லிய எளியேன் உரைகளையும் பொருளாக்கி, இந்நூலைக் கடாட்சித்து, மீட்டும் செய்த பேராசியைப் பெரும்பேருக இன்று பெற்றேன்.

அறநிலயப் பாதுகாப்புத் துறை ஆணையாளர் திருமிகு. M. S. சாரங்கபாணி முதலியார், B.A.,B.L., அவர்களும், துணை ஆணையர் திரு. D. இராமலிங்க ரெட்டியார், M.A.,B.L., அவர்களும், அன்பொடு இந்நூலைக் கண்காணித்துக் காப்புரை வழங்கினர். அவ்விரு முதல்வர்கட்கும், உவந்து இந்நூலை முதலில் எழுத ஊக்கிய அஸிஸ்டெண்ட் கமிஷனர் உயர் திரு. T. H. விவேகாநந்தம் பிள்ளை, B.A.,L.T., அவர்கட்கும், தர்மகர்த்தர்கட்கும், எம்மான் திருவருளை என்றும் புரிகென, இதயமுகமாகி இறைஞ்சுகிறேன்.

இத்தல புராணத்தை முதற்பதிப்பாக அச்சிட்டுப் பரப்ப முன் வந்த திருவள்ளூர் சக்தி அச்சக உரிமையாளர் திருமதி: இளஞ்சியம்மையார் குடும்பத்தாரது பேருதவி, என்றும் எண்ணி இன்புறற்கு உரியது. வாழ்க அவர்கள் வளன்.

பலகாலமாக இத்தலத்தின் மானேஜிங் டிரஸ்டியாயிருந்து, அரிய பல திருப்பணிகளைச் செய்தவர் திரு: கு. செ. ஆறுமுகம் செட்டியார் அவர்கள். உள்ளம்போல் உயர்ந்த இவ்வுத்தமர், இந்நூலைக் கண்காணித்து, அரிய பல செய்திகளை அறிவித்து, உணர்வு முகம் காட்டி ஊக்கிய அன்பின் பண்பை என்றும் மறவேன். இந்நூல் வெளிவரும் காலத்தில், சென்னை கந்த கோட்டம் ஸ்ரீ முத்துக்குமார ஸ்வாமி தேவஸ்தானத்திற்கும் அவர்கள் தர்மகர்த்தர் ஆன செய்தி எவரும் மகிழ்ந்து இன்புறற்கு உரியது.

ஆண்டார் குப்பம் தேவஸ்தான நிர்வாகத்தைப் பல காலமாகப் பரிபாலித்துவரும் தர்மகர்த்தர்கள் உத்தமர்கள். உணர்வுமயமானவர்கள்; கைங்கர்ய ஆர்வம் கலந்தவர்கள்; அந்த உத்தமர்கள் உள்ளம்போல், எங்கும் பரவி இந்நூல் எவர்க்கும் இன்பம் தருகென, ஸ்ரீபாலசுப்ரமண்யப் பெருமான் திருவருளை, வாழ்த்தி அடியேன் வழிபடுவன்.

ஆண்டவன் திருவடிகட்கே அடைக்கலம்.

ஓம்.

இங்ஙனம்:

அன்பர் பணியை

ஆவலிக்கும்

குகஸ்ரீ. ரஸபதி.

97, சஞ்சீவிராயன் கோயில் தெரு,
பழைய வண்ணை, சென்னை-21.
11—2—65

நிர்வாக தர்மகர்த்தர்:

திரு: கு. செ. ஆறுமுக செட்டியார் அவர்கள்

தர்மகர்த்தர்கள்:

திரு: M. குமாரசாமி செட்டியார், B.A., அவர்கள்

திரு: K. பக்தவச்சலு நாயுடு அவர்கள்

நிர்வாக அதிகாரி:

திரு: ~~N.~~ A.K. ஜெகந்நாதன் அவர்கள்

உ

# பாலசுப்பிரமணியர் துதி.

ஆண்டார் குப்பத்(து) அமரா குமரா !
வேண்டுநர்க்(கு) அருளும் பாலா வேலா !
விண்ணினை ஆளும் பேரொளி விமலா !
கண்ணினை நண்ணிக் கதிதரு வோனே !
ஆண்டும் திங்களும் நாளும் ஆனவா !
காண்தகு ஞானர் கருத்துள அரசே !
அறுபடை வீட்டின் அருள்மா மணியே
நறுமண வெட்சி நன்மா லையினாய் !
அசுர இருளை அழித்த அரசே !
கசியும் உள்ளம் கலந்த தெய்வமே !
சீருயர் நாதச் சேவல் கொடியாய் !
பேருயர் சுப்ர மண்யப் பெரும !
அமைதி உருவா வந்தே அமர்ந்தாய்;
சக்தி தருமெம் சக்தி பாலா !
சக்தி அச்சகர் நாளும் சார்ந்து
பக்தி பெருக்கிப் பணிய நினைக்கும்
அக்கரை தன்னை அறிவை அரசே !
ஆண்டார் குப்பம் அருள்நில மாக
வேண்டிய அன்பர் வியன்வளன் எய்த
தாதா வரம் நீ தற்பர சிற்பர !
தாதா நீதா தாண்மலர் சரணே !

—சக்தி அச்சகத்தினர்.



ஸ்ரீ பாலசுப்பிரமணியர்
(மூலவர்)

## ஆண்டார்குப்பம் என வழங்கும்

# ஸ்ரீ சுப்ரமண்யபுரத் தல வரலாறு.

நலம் சிறந்தது தொண்டை நாடு. சிறந்து விளங்கும் சிவாலயங்கள், திருமகள் கேள்வரின் திருக் கோயில்கள், தெய்வக் குமரன் திருத்தளிகள், அறிவும் திருவும் அமைதியும் விளைய, இந் நாட்டில் எங்கும் இருக்கின்றன.

சென்னை சென்ட்ரல் புகைவண்டி நிலையத்தி லிருந்து 20 மைல் தூரத்தில் இருக்கிறது, பொன்னேரி புகைவண்டி நிலையம். அங்கிருந்து தென்மேற்காகப் பன்னிரண்டு மைல் தூரம் சென்றால், பிருகு முனிவர் வழிபட்ட திருக்கள்ளில் எனும் பாடல் பெற்ற பதியுளது. மேற்கு நோக்கி 10 மைல் தூரத்தில் பெரியபாளையம் எனும் பிரசித்தமான பராசக்தி திருக் கோயில் திகழ்கிறது. அதன் அண்மையில் 3 மைல் தூரத்தில் காட்டாவூர் எனும் ஒரு அருமைத் தலம். உரோமச முனிவர்க்கு, அப்பதியில், அறுமுக அமலன் ஓம் பொருள் நுட்பத்தை உபதேசித்தான். அரிய இவ் வரலாற்றை, அத் தலம் இன்றும் அறிவித்துக் கொண்டே இருக்கிறது.

## ஸ்ரீ ஆண்டார்குப்பம்

மேலுரைத்த முக்கண் போன்ற மூன்று பதிகளையும், ஆர்வமொடு நோக்குகிறது, ஆண்டார்குப்பம் என வழங்கும் ஸ்ரீ சுப்ரமண்யபுரம். இது, செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த பொன்னேரி புகைவண்டி நிலையத்திலிருந்து நான்கு மைல்.

சென்னை, தங்கசாலையி லிருந்து பஸ்ஸில் ஏறி, இருபது மைல் தூரம் சென்று, தச்சூர் கூட்டு ரோட்டில் இறங்கி, அங்கிருந்து வடக்கு நோக்கி ஒரு மைல் தூரம் சென்றால் இப் பதியைச் சேரலாம்.

ஊருள் நுழைந்ததும், தென்கிழக்கில் குமாரஸ்வாமி குளம்; வடகிழக்கில் வேலாயுத தீர்த்தம் எனும் பால நதி. அரிய இவைகளின் வரலாறு அற்புதமானவை. அதைப் பின் வரும் தல புராணத்தில் அறிவம்.

சில காலங்கட்கு முன், இத் தலத்தின் இன்றைய மானேஜிங் டிரஸ்டி அவர்களின் தந்தையார் கும்மிடிபூண்டி திரு: செங்கல்வராய செட்டியார் அவர்களது அழகிய பல மரங்கள் அடர்ந்த தோப்புகள் இருந்தன. யாத்திரையாக வருபவர்கள், அத் தோப்புகளில் வன போஜனம் நடத்துவது வழக்கம். இன்று அவைகள் வானளாவிய தென்னந் தோப்புகளாக வளர்ந்திருக்கின்றன.

நம்பனைச் சூழும் நான்மறை போல், முதன்மை மாட வீதிகள், ஆலயத்தை முற்றுகை யிட்டிருக்கின்றன. ஆரம்பத்தில் இதை அறிகிறோம். முறையே அவைகளை வலம் வர முயல்கிறோம்.

## தென்மாட வீதி

செவ்வேள் பெருமானைச் சேவிக்க வேண்டும்; பெறற்கு அரிய அவன் அருளைப் பெற வேண்டும்; அந்த நினைவுடன், அவ்வக் காலங்களில் அன்பர்கள் வருவர். அவர்களது பிறவி அயற்சியை, ஆண்டவன் அகற்றுவன். நாவறட்சியைத் தீர்க்க நான் இருக்கிறேன் என்று, தாக காலத்தில் உதவும் ஒரு தண்ணீர்ப் பந்தர், தென்மாட வீதியில் திகழ்கிறது.

## மேன்மாட வீதி

கவின் மிகுந்த கோங்கு மலரில் கலைமகள். நலம் மிகும் அலரி மலரில் நான்முகர். திகழும் வன்னியில் தீக் கடவுள். நந்தியாவர்த்தத்தில் திரு நந்திதேவர். வளமார் புன்னையில் வாயுதேவர். செங்கழுநீரிலும் எருக்கிலும் சூரியன். சண்பகத்தில் சண்முகன். திண்மை வில்வத்தில் திருமகள். கொக்கிறகு மலரில் கோவிந்தர். மாவிலங்கையில் வருணன். மகிழ மலரில் கலைமகள். நிகழும் வாகையில் நிருதி. சாதிப் பூவில் ஈசாநர்.

குமுதத்தில் அமுத மதி. மந்தாரையில் இந்திரன். மதுமத்தையில் குபேரன். நாயுருவியில் இயமன். தாமரையில் சிவபெருமான். நீலோற்பலத்தில் உமாதேவி. இங்ஙனம் ஒவ்வொரு மலரிலும் உரிய தெய்வங்கள் உவகை கொண்டுள. அவைகளைக்கொண்டு அர்ச்சிப்பார்க்கு, எண்ணிலாத பேறுகள் எளிதின் எய்தும். இது ஆகமங்களின் அறிவிப்பு.

இந்த அருமையைப் பல நாள்கட்கு முன்பே அறிந்த வைசியப் பெருமக்கள், இம் மாட வீதியில், சென்னை ஸ்ரீ கந்தஸ்வாமி கோயிலுக்கு என்று ஒரு நந்தவனத்தை அருமையாக அமைத்துளர்.

அதன் வடமேற்கில் இன்றைய மானேஜிங் டிரஸ்டி அவர்களது தந்தையாரான கும்மிடிபூண்டி திரு: செங்கல்வராய செட்டியார் அவர்கள், தேவஸ்தானத்திற்கென்று தனியே அமைத்த ஒரு நந்தவனம் இருக்கிறது. அவர்கள் சொந்த செலவில் முயன்று நாள்தோறும் மூன்று காலத்திற்கும் உரிய மலர்களையும், சந்தனத்தையும் ஆண்டவன் வழிபாட்டிற்கு அளிக்கின்றனர். இவைகளால் மேல் மாட வீதி, புனித புண்ணியத் தானமாகப் பொலிவெய்தி யிருக்கிறது.

## வட மாட வீதி

இதனில், ஆயிரவாள் பேரி செட்டிகள், தங்கட்கென்று அமைத்த இரு பகுதியான ஒரு சத்திரம் இருக்கிறது. அதனுடன், இத் தல மானேஜிங் டிரஸ்டியான உயர்திரு: கு. செ. ஆறுமுக செட்டியார் திருமாளிகை ஒன்றும், இவ் வீதியில் இருப்பதை அறிகிறோம்.

## கீழ் மாட வீதி

இவ் வீதியில், குமாரசாமி மண்டபம். அதனுடன் சந்நிதி வீதி, இங்கிருந்து தான் ஆரம்பம் ஆகிறது.

## சந்நிதி வீதி

பேரி செட்டிகள் கலியாண மண்டபம்; தேவாங்க மார்ச்சால மன்னுர் செட்டியார் சத்திரம்; அதற்கெதிரில் தேவாங்க சஜ்ஜா முனிசாமி செட்டியார் சத்திரமும், அதன் முகப்பில் ஒரு கிணறும் இருக்கின்றன. அதனுடன் இருபுறமும் தென்னை மரங்கள்; வீதியின் ஆரம்பத்தில் இரு பாஞ்சாலி மரங்கள்; இவைகள் குளிர்ந்த நிழலை எவர்க்கும் கொடுக்கின்றன. வேம்படி விநாயகர் ஆலயம்; அதையடுத்து, கிராம தேவதையான பாதாள கங்கையம்மன் திருக் கோயில்; இவைகள் அனைத்தும், சந்நிதி வீதியின் சார்பு கொண்டுள.

## கோபுரம்

சிவாலயம் என்பது, ஒரு சிறந்த திருவுருவம். அதனுள் செம்மை பெற்ற மூலஸ்தானம் சிரம்; கவின் மிகுந்த அர்த்த மண்டபம் கழுத்து; மகா மண்டபம் திரு மார்பு நலம் சிறந்த யாக சாலை நாபி. தெய்விகக் கோபுரம் திருவடி.

இனி வேறு வகையாகவும் இது எண்ணப் பெறும். திகழும் சிவாலயம் திருமேனி. குவிந்த திருவாய் திருக் கோபுரம். நந்தியெம் பெருமான் திரு நாக்கு. உயர்ந்த கொடி மரம் உள் நாக்கு. அழகிய விளக்குகள் ஐம்பொறிகள். இன்பக் கர்ப்பக் கிருகம் இருதயம். உயர்ந்த சிவலிங்கம் உயிர். கோபுரம் தூல லிங்கம்; கர்ப்பக் கிருக விமானம் சூக்கும லிங்கம்; சிவலிங்கம் காரண லிங்கம்; ஆகமங்கள் இவ்வாறு அறிவிக்கின்றன.

சிவாலயம், சர்வ தேவதா சொரூபம்; கோபுரத்தில் உள்ள சிற்பங்கள், இவைகளைக் குறிப்பிடுகின்றன. கோபுர தரிசனம் பாப விமோசனம் என்ற நினைவுடன், ஏழு கலசங்ளுடைய ஐந்து நிலையான ஆண்டார்குப்பக் கோபுரத்தை, கண்டவுடன் கை குவிக்கிறோம்.

1. கோபுர உச்சி முழுதும் தட்சனுக்குத் தாட்சாயணி மகளாகப் பிறந்த வரலாறு.

2. அடுத்த நிலை முழுவதும் சூரபதுமனுதியர் உற்சவம், கந்தப் பெருமான் திருவவதாரம், நவ வீரர்கள் தோற்றம்.

3. அதற்கடுத்த நிலை முழுவதும் சூரனுதியர் வேள்வி செய்தல், வரம் பெறுதல் முதலிய வரலாறுகள்.

4. அடுத்த நிலை முழுவதும், திருச்செந்தூரில் இருந்து வீரவாகு தூது, சஷ்டிப் போர்.

5. அதற்கடுத்த நிலையில் தேவர்கள் முறையீடு முதலிய வரலாறுகள், கிழக்கு நோக்கிய சிற்பங்கள்; தெற்குப் புறத்தில் தட்சிணுமூர்த்தி, காமனெரியும் காட்சி.

மேற்குப் புறத்தில் தாருக சிங்கமுக சம்ஹாரம். வடக்குத் திசையில் சூர சம்மாரம், மாமரம், மயிலில் அமர்ந்து சேவல் கொடி ஏந்திய அற்புத தரிசனம். இந்த அரிய சுவைச் சிற்ப அமைப்புகளை இராஜ கோபுரத்தில் அறிகிறோம்.

## திருக்கதவு

தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப் படும் என்று, எந்நாட்டிலும் இப்படி ஒரு பழமொழி இருக் கிறது. அநியாய சொருபமான ஆணவம், மாதேவர் திரு வுருவை மறைக்கும்; கனிவுடைய உயிரின் பரிபாகம் கண்டு, ஒதுங்கி விடும் அந்த இருள் மலம். கம்பீரமான கோபுர வாயிலுள்ள பெரிய கதவுகள், அத் தத்துவத்தை இனிது அறிவிக்கின்றன. இத் திருக் கதவு, ஒரக்காட் கிராமம் உயர் திரு: R. கோவிந்தராஜு நாயுடு அவர்கள் செய்துவைத் தவை. உள்ளிருக்கும் சந்நிதிக் கதவுகள் ஒவ்வொன்றும் ஆசைகள், கோபங்கள், அகங்காரங்களின் சொரூபங்கள்; அவைகள் அகன்ருல், அமலன் தரிசனம் அடையலாம். இக் குறிப்பு அருள் நூல்களின் அறிவிப்பு. அகத்தும் புறத்தும் தூய்மை அமைய, ஆண்டவனையே பெரிதும் ஆவலித்தாரை, வழி மறைக்க எமக்கு உரிமை யில்லை என்பனபோல், காலத்

தில் அக் கதவுகள் திறந்திருக்கின்றன. ஊன்றி இவைகளை உணர்கிறோம். உருகுகிறது நம் உள்ளம். அந்த உவகையுடன் உள் நுழைகிறோம்.

## துவஜ ஸ்தம்பம்

இது, மூலஸ்தானத்திற்கு நேராக நிமிர்ந்து கம்பீரமாக நிற்கிறது. எழுந்த தம்பம்போல் இருந்து, இடைகலை, பிங்கலை எனும் இரு நாடி வழியே சென்று, பிணங்கித் திரும்பும் பிராணனை நேரான சுழுமுனையில் நிறுத்தி, ஆடாமல் இருந்து, சிறிதும் அசையாமல் தியானிக்க, ஓடும் பிராணன் ஒடுங்கி நிற்கும். அதன் வழியே மனம் அடங்கும். உறுத்த பொறிகளின் சேட்டை ஒடுங்கும், அந் நிலையில், தொல்லை உலகம் கண்கட்குத் தோன்றாது மறையும். அதன் பின் ஆறுமுக தரிசனம் ஆகும்; அரிய இந்த நுட்பத்தை துவஜ ஸ்தம்பம் அறிவிக்கின்றது.

வான் நோக்கி வளர்ந்த அந்தத் தம்ப உச்சியில் இருந்து, கணகண என்று ஒலிக்கும் மணிகள், வாருங்கள்! சிவ குமரனைச் சேவியுங்கள்! சிந்தியுங்கள்! க்ஷேமம் அடைவீர்கள் என்று எச்சரிக்கும் அருள்நாதம் போல இருக்கின்றன. அவ்வோசை செவியில் புகுந்ததும், ஆநந்தம் அடைகிறது நமது மனம். இங்கிருந்து முறையே வளமார் பிரகாரங்களை வலம் வருகிறோம்.

## தெற்குப் பிரகாரம்

ஆன்ம அறிவை, ஆறுமுகப் பரனிடம் அர்ப்பளிப்பது ஆன்றோர்களது ஆசாரம். நிவேதனம் எனும் பெயரால் அதை நினைவு படுத்திக் கொள்பவர்கள் நாம்.

"பாட்டிற்(கு) இன்புறு குருபரன் பாதமேல் கண்ணீர்
ஆட்டிச், சொல்மலர் அணிந்து, தற்போத இன்னமுதை
ஊட்டித், தற்பர ஞானமாம் ஓமவெங் கனலை
மூட்டிச், சம்புவின் பூசைமேல் முயற்சியர் ஆனார்"

எனும் ஆகம நுட்பம் இங்கு அறியத் தகும். அகங்காரம், சங்கற்பம், விபரீதம், குரோதம், மோகம், விசனம், மதம். நகை எனும் மூலமலச் செயல்களைப் பலி கொடுத்த பண்பு இது. இத்தத்துவ நுட்பத்தை இனிது அறிவிப்பது போல், இப்பிராகாரத்தில் ஒரு மடைப்பள்ளி இருக்கிறது. அதைக் காண்கிறோம். உரிய காலத்தில், சுவாமிக்கு நிவேதனம் உதவும் புனித நிலையம் இது என்று, புளகிக்கிறது நமது மனம்.

அதை யடுத்தது தானியக் களஞ்சியம். திருப்பணி வளர்க்கும் அந்தத் திவ்விய இடத்தைக் கண்டதும், இக் களஞ்சியம் என்றும் பெருகி இருப்பதாக என்று, கூப்பிய கரங்களால் அதைக் கும்பிடுகிறோம்.

அதன் அண்மையில், தேவஸ்தான நிர்வாக அறை. அதை நிர்வகிக்கும் பக்த பிரமுகர்கள் பணியால்தான், ஆலய அருமையை உலகம் அறிந்து கொள்ள இயல்கிறது. இங் கிருந்து பணி வளர்க்கும் பண்பாளர் யாவரும், வளம் பல பெற்று வாழ்கென்று வாழ்த்துகிறோம். இப் பிராகாரத்தில், எங்கும் பூச்செடிகள் இருக்கின்றன.

எங்கே பார்க்கிறாய்? என்னையும் பார் என்கிறது, இங்கு இருக்கும் கலியாண மண்டபம். எம்பெருமான் திருமண விழா, இங்கு தான் நிகழும். கண் கொள்ளா வனப் புடைய கட்டழகன், ஆண்டார் குப்பத்து ஆண்டவன். சிறந்த இருவரைத் திருமணம் செய்து,

"போகியா யிருந்து உயிர்க்குப் போகத்தை அருள்கிறான்."

இது சிவ ஜீவ திருமண அறிவிப்பு.

மனமே! இடர்ப்படு வாழ்க்கையில் ஏமாந்து போகாதே! இதுவரை நீ கண்ட சுகம் யாது? எதிர்காலச் செய்தியும் இவ்வளவு தான் என்று நினை! வா! முதன்மை இத் திருமணத்தை மோந்து கொள்! இது தான் பேரின்ப இடம். நிர்வாகிகள் திருமணத்தை நிகழ்த்தி வைப்பர். அக் காலத்தில் நீ எம்மானை அனுபவிக்க வேண்டும்! வா! வா என்று, அம்மண்டபம் மனத்திற்கு அறிவிப்பது போன்ற உணர்வு, அங்கு உண்டாகின்றது.

## மேற்குப் பிராகாரம்

பரமன் விழாக் காலத்தில் பயன்படும் வாகனக் கிடங்கு, இப் பிராகாரத்தில தான் இருக்கிறது. அடுத்து, வழிபாட்டு சாமான்களை வைத்திருக்கும் உக்ராண அறை. அவைகளை அங்கு அறிகிறோம். ஆஹா! எந்தப் பாத்திரங்களும், எம்மான் திருப்பணிக்கென்றே இருக்கின்றனவே! இவைகள் பெறும் பேற்றை யாம்பெறும் நாள் எந்நாளோ என்ற எண்ணம், இங்கு நமக்குள் எழுகிறது. இங்கும் சில பூஞ்செடிகள் இருக்கின்றன,

## வடக்குப் பிராகாரம்

இங்கு யாகசாலை இருக்கிறது. இனிய வேள்வி இரு வகைப்படும். ஒன்று தூல வேள்வி; மற்றொன்று சூக்கும யாகம்.

தூலம்—கரும வேள்வி. சூக்குமம்—ஞான வேள்வி.
கரும வேள்வி—காயிகம், வாசிகம், மானதம் என மூவகைப் படும்.

காயிகம்—நித்தியம், நைமித்திகம், காமிகம் என மூவகை.
வாசிகம்—மந்திர ஜெபம், மானதம், தெய்வத் தியானம் என மூவகை.

ஞான வேள்வி—அகத்தில் அறிவின் துணைக்கொண்டு ஆற்றுவது.

திருவிழாக் காலங்களில் நிறுத்தப்பெறும் கும்பங்கள், எழுவகைத் தாதுக்களாலும் ஆகிய திருமேனி என்று எண்ணப் பெறும்.

கும்பங்களில் சுற்றிய உடையே, தோல்; அதன்மேல் பூசிய செம்மண், குருதி. அக் கும்பங்களின் மண், மாமிசம். கும்பங்களின் நிறைந்த நீர், மேதஸ். தருப்பை, எலும்புகள். நாற்புறமும் சுற்றியுள நூல்கள், நரம்புகள். உள் இட்ட ரத்தினம், பொன் முதலியன, வீரியம். உச்சரிக்கும் மந்திரமே

உயிர். கீழ் பரப்பிய நெல், அரிசி, எள், பயறு, உளுந்து, துவரை, கோதுமை முதலிய எழுவகைத் தானியங்கள், ஆசனங்கள். இந்த அமைப்புடைய யாகசாலையைக் கண்டதும், உள்ளம் இன்பம் காண்கிறது.

யாகநிலம், திருமால் சொரூபம்; யாகத்தீ, சிவ சொரூபம். யாகத்தை நடத்துகின்றவர், நான்மறை உணர்ந்த ஆகம மந்திர அந்தணர்கள். யாகத்தைக் காப்பவர், சிவசுப்ரமண்யப் பெருமான். ஆறுமுகத்துள் ஒரு முகம், வேள்வியைக் கண் காணிக்க, அதற்கு உரிய இரு கரங்கள், இடையூறு பிறவாமல் கம்பீர வேள்வியைக் காக்கின்றன. இவ்வளவும் சுருதி சொல்லும் செய்திகள். உணர்கிறோம்; உள்ளம் மகிழ்வு கொள்கிறோம்.

கும்மிடிபூண்டி திரு: செங்கல்வராய செட்டியார் புட்ப கைங்கர்யத் திட்டத்திலிருந்து மாலை கட்டி, சந்தனம், பழம் முதலியன வெளியிலிருந்து கொண்டு வர, இப் பிராகாரத்தில் தனி ஒரு வழியும் இருக்கிறது. கவின்மிகும் சில பூஞ்செடிகளை, இங்கேயும் காண்கிறோம்.

## பலி பீடம்

இங்கே வா! என்னைப் பார்! நான்தான் பாச சொரூபம் என்கிறது பலி பீடம்.

## மயில் சொரூபம்

மகத்தான பலி பீடத்தின் முன், மயூரதேவர் நுட்பமாக மூலவரை நோக்குகிறார். அளவிலாத் தத்துவங்கள், அம்மயிலில் அமைந்து இருப்பதை அறிகிறோம்.

வீரர்களை எதிர்த்தவர்க்கு, வீழ்ச்சிதான் அனுபவம். என் சரித்திரத்தை எண்ணுங்கள். எம்மான் குமரனை, நான் எதிர்த்தேன். இறுதியில் தோற்றேன். அம்மான் என்னை அவமானப் படுத்தவில்லை. எனக்கு ஊர்தியாய் இருக்கிறான். அது மாத்திரமா! வகையாகத் தன்னைத் தொழ வருபவர் யாவரும், என்னை முதலில் வணங்குமாறு ஏற்றம்

அளித்தான். என்னே அவனது பேரருள்! ஊன்றி அதனை உணர்கிறேன். பார்த்த கண் வாங்காமல், பரமன் சந்நிதானத்தைப் பார்த்தபடியே இருக்கிறேன் என்கிறார் மயூர தேவர்.

பதியுள காலம் முதல், பசு பாசங்கள் உள. இம் மூன்றும் அநாதி நித்தியம். வியாத்தி–பலி பீடம்; வியாப்பியம்–மயூர தேவர்; வியாபகர் மூலவர். இச்செய்திகள் என்றும் நம் நினைவில் எழுகின்றன.

அதே நேரத்தில் இங்குள ஆலய மாமணி, ஓம் ஓம் என்று ஒலிக்கிறது.

இது பதினாறு கால் மண்டபம் எனப்பெறும்.

## சோபான மண்டபம்

1. இதன் ஈசான்ய திசையில் உள்ள முதல் தூணில், அன்பு மிக்க சம்வர்த்தனர்க்குப் பெருமான் வேலாயுத தீர்த்தம் அருளும் காட்சி, கிழக்கு நோக்கியிருக்கிறது.

2. அதையடுத்துக் கிழக்கிலுள்ள தூணில், பிரமனைக் குட்டி சிறையிடும் தெற்கு நோக்கிய திருக்கோலம்.

3. அதை ஒட்டிய கிழக்குத் தூணில், வட திசை நோக்குகிறார் சு ந் த ர ர்; கிழக்கு நோக்குகிறார் விடையூரும் பெருமான்.

4. அதைச் சார்ந்த தென்கிழக்குத் தூணில், கிழக்கு நோக்குகிறார் விநாயகர்; தெற்கு நோக்குகிறார் திருஞானசம்பந்தர்.

5. தெற்கில் உள்ள முதல் தூணில், கலைமகள் வீணை ஏந்தித் தெற்கு நோக்கிய திருவுருவத்தில் திகழ்கிறார்

6. தெற்கில் உள்ள இரண்டாவது தூணில், ஸ்ரீ மகாலட்சுமி திருவடிவம்.

7. தென் மேற்குத் தூணில், ஸ்ரீ சுவாமிநாதர் தெற்கு நோக்கி உபதேசிக்கும் திருவடிவம்.

8. 9. மண்டபத்தின் நடுவிலும், சந்நிதியை அடுத்தும் உள்ள இரு தூண்களில், கிழக்கு நோக்கிய துவார பாலகர்கள்.

10. வடமேற்கில் உள்ள ஒரு தூணில், தெற்கு நோக்கித் திருமால்; கிழக்கு நோக்கி ஸ்ரீ மாணிக்கவாசகர்.

11. வடக்கில் உள்ள ஒரு தூணில், தெற்கு நோக்கிய ஸ்ரீ நடராஜர்.

12. அதைச்சார்ந்த மற்றொரு தூணில், ஸ்ரீசிவகாமியார்.

13. மண்டப நடுவின் உள்ள வட கிழக்குத் தூணில், தெற்கு நோக்கிய ஸ்ரீ பழநி ஆண்டவர்.

14. மண்டப நடுவில் வடகிழக்கில் உள்ள மற்றொரு தூணில், வடக்கு நோக்கிய ஒரு முருக பக்தர்.

15. மண்டப நாப்பண் உள்ள தென்கிழக்குத் தூணில், வடக்கு நோக்கி ஸ்ரீ அருணகிரிநாதர்.

16. வடமேற்கில் உள்ள தூணில், தெற்கு நோக்கிய ஸ்ரீ பாலசுப்ரமண்யர்.

இப்படி அற்புதமாக அமைந்த சிற்பங்கள், நியதியான பல புராண வரலாறுகளை நினைவூட்டுகின்றன. இந்த அனுபவத்துடன், மண்டப நடு இடத்திற்கு வருகிறோம்.

## மண்டப நடு இடம்

ஆரம்பத்தில் தேவஸ்தான உண்டி அருமையாக இருக்கின்றது. உண்டியில் இலட்சுமி உறவு பூண்பாள் என்னும் குறிப்பை, அதையடுத்து நிமிர்ந்து நிற்கும் கிளை விளக்கு நினைவூட்டுகின்றது. அது கண்டு, மகிழ்கிறது நமது மனம்.

விளக்கை யடுத்து, குட்டுப்பட்ட கோலத்தில் பிரம்ம தேவர், எடுப்பான மூலவரை எதிர்நோக்கி யிருக்கிறார். தன் தவறை மன்னிக்குமாறு அவர் கைகுவித்து இருக்கும் காட்சி,

இறந்தகால பல வரலாறுகளை எண்ண வைக்கின்றன. இது மிகப் புராதனமான தலம் என்பதை, அவர் உருவப் பழமை கொண்டும் அறிகிறோம்.

## சந்நிதி விநாயகர்

இப்பெருமான், கஜமுக சம்ஹாரத்தின் பொருட்டு ஒடித்த ஒரு தந்தத்தைக் கரந்தில் ஏந்தியுளர். மும்மல கண்டனர். முச்சக்திகளான மும்மதத்தர். ஐங்கரத்தர். ஆணவ யானையைப் பாசத்தால் பிணித்து, அங்குசத்தால் குத்தி ஆள்பவர். குண்டலினி பெருச்சாளி உருவம் கொள்ள, அதற்கு நலம் சிறந்த ஞானத்தை நல்கியவர். அதன்பின் அதைத் தன் ஊர்தி யாக்கியவர். நித்ய பக்தர்கள் பசு ஞானத்தை நிவேதிக்க, அவர்கட்குச் சிவ ஞானத்தை அருள்பவர். ஐந்தொழிலர் தாமே எனத் தம் ஐங்கரத்தால் காட்டும் அத்தர் இவர். ஒரு புறம் தந்தம் இருப்பதால், ஆண் ஆனுர். ஒரு புறம் இன்மையால் பெண் ஆனுர். ஆம். ஆம். இன்மையும் உண்மையுமான அலி ஆனுர். பிரணவமே இவர் திருமுகம் என்று சிந்திக்கச் செய்யும் இந்தச் சித்தி கணபதியை,

“ அரசன்னம் அழகுவண மிசையிவரும்
அரவிந்தம் அரவணைந்தான்
முரசன்ன பரவலினுக்(கு) அருள்பொழியும்
சிவபெருமான் முதற்பேருகி
வரசன்னம் வளர்கழனி நிறைஆண்டார்
குப்பத்து வதியும் எங்கள்
பிரசன்ன விநாயகனுர் உயர்சரணை
உளத்திருத்திப் பேசுவாமால் ”

என்று பாடுவம். அதனுடன், கணபதி சந்நிதி மதில் சுவரில் உள்ள துதிப் பாடல்களையும் ஓதுவம் ; உள்ளம் உருகுவம்; ஐந்து குட்டுப் போடுவம் ; தோப்புக் கரணமிட்டுத் தொழுவம்.

அதன்பின் மூலவரைச் சேவிக்க முந்துவம்.

# மூலஸ்தானம்

வட்டமான ஓங்காரத் திருவாசி. பளபளக்கும் அதன் நடுவில் ஸ்ரீபாலசுப்ரமண்யர், நீண்ட வேலுடன் நின்ற கோல மாக இருக்கின்றார். கேண்மை தரும் இரு திருவடிகளில் கிண்கிணி. இடையில் ஒரு திருக்கரம். கமலம் ஒரு திருக் கரத்தில். கமல மலர்போலும் ஒரு திருமுகம். கருணை பொழியும் திருக்கண்கள். சோடச மூர்த்தங்களுள் ஒன்றான இப் பாலசுப்ரமண்யத் திருவுருவைப், பார்த்தால் பசி தீரும். எத்துணை நேரம் தரிசித்துக் கொண்டே இருந்தாலும், மனம் சலிப்பது இல்லை. அவ்வளவு அற்புத சௌந்தர்ய அருள் அமைந்த திருவுருவம்.

பத்தில் பதட்டம். இருபதில் எடுப்பு. முப்பதில் முடுக்கு. நாற்பதில் அறிவு. ஐம்பதில் சொறி. அறுபதில் தாது கெடும். எழுபதில் ஈளை. எண்பதில் நடுக்கம். தொண்ணூறில், நினைவு சக்தி நிலைகுலையும். நூறில் உயிர்போம். வேதம் விதித்த நூறு ஆயுள்வரை இருப்பார்க்குச் செய்தி யிவை. இது மக்கள் கணக்கு. அங்ஙனம் இன்றி, இறப்பு பிறப்பு இல்லாதார். பசுத்துவத் தன்மை படராதார். முதுமை வயதென முடங் காத இப் பெருமான், என்றும் இளந்திரு மேனியர் ஆயி னார். அறிவின் பிறப்பிடம். அழகின் சொரூபம். ஆற்ற லின் கருவூலமாக, வீர விலாச விஜய தெய்வமாக, ஸ்ரீ பால சுப்ரமண்யர் விளங்குகிறார். இங்குப் பெருமானுக்கு மூன்று கால பூஜை நடைபெறுகின்றது.

காலையில் பாலர். பகலில் வாலிபர். மாலையில் வயோதிகர்; இப்படிக் கோலம் செய்து பக்தர்கள் பெருமா னைக் கும்பிடுகின்றனர். ஆண்டார்குப்பம் என்னும் ஸ்ரீசுப்ர மண்யபுர அதிசயங்களுள் இது ஒன்று.

பெருமான் திருமுன், வெள்ளியால் ஆன தூங்கா விளக்கு ஒன்று; நான்கு பித்தளை விளக்குகள். இவைகள், ஜோதிமயன் இறைவன் என்பதை, மேம்பட எவர்க்கும் மெய்ப்பிக்கின்றன. உள் பிரகாரத்தில், ஆறுபடை வீட்டு அற்புதத் திருப்புகழ்கள் எழுதப்பெற்று இருக்கின்றன. சேவிக்க வருவார் மனனம் செய்யச் சிறந்த உதவி இது.

சிவஜோதிக் கனலே! நித்திய மெய்ப் பொருளே! அடியவரைத் தடுத்தாளும் அப்பா! அன்பு முருகா! அருணகிரிக்கு உதவும் இன்ப குமரா! கூடும் இதய குகா! துன்பம் துடைக்கும் துரையே!

"அள்ளிப் பருகிஉன் ஆனந்த கானரசம்
துள்ளிக் குதிக்கத் துறுதுறுத்தேன்—உள்ளத்தில்
ஓங்கார மாகி ஒளியாய் நிறைந்தென்னை
நீங்கா திருக்க நினை"

"கந்தா! கடம்பா! கலாப மயில்மேலே
வந்தாள் வடிவேல வா!"

என்று இங்கு வாய் வாழ்த்த, மனம் நினைக்க, தாழ்ந்து வணங்குகிறது நம் தலை. அன்பைச் சமர்ப்பிப்பம். அர்ச்சனைகள் செய்வோம். எத்தனை பக்தர்கள் கூடினாலும் தப்பிலாமல் சேவிக்க, இரும்புக் கம்பிகளை வரிசைப் படுத்தி, அரிய உதவியைச் செய்துள்ளனர் ஆலய நிர்வாகிகள். ஆராதனை நிறைவேறியதும், ஆதிசைவ அந்தணர் அபிஷேக தீர்த்தம் அளிக்கின்றார். உவகையோடு ஏற்போம். உள்ளுக்கும் கொள்வோம்; அதை உச்சிக்கும் தெளிப்போம்; அது நம் கர்ம அழுக்கைக் கழுவும்; ஆணவ அழுக்கை அழிக்கும்; ஆதலின் இதைப் பரமானந்த தீர்த்தம் என்று பாவிப்பம். அடுத்து வித்தக ஞானமான விபூதி, குண நிறைவு செய்யும் குங்குமம் இரண்டும் வரும். விந்து தத்துவ விளக்கம் விபூதி. நாத தத்துவ சின்னம் குங்குமம். இன்னும் இது குறித்த நுட்பங்கள், ஏராளமாக இருக்கின்றன. இந்தத் திவ்யப் பிரசாதத்தால், பேறணைத்தும் ஆன்மா பெறும். தீர்த்தம் நீறு குங்குமம் தந்து, அன்பொடு ஆசி கூறுகிறார் அர்ச்சகர்.

மனதில் வளரும் மகிழ்வே! மலையில் வளரும் மருந்தே! அன்பருள் இன்ப அமுதே! உயிருக்கு இனிதே உதவியருள்! முருகா! முருகா! என்று புனித அன்பு வெளிப்படப் போற்றியபின், அங்கிருந்து புறப்படுவம்.

## விஸ்வநாதர்

சந்நிதான வடபுற ஆரம்பத்தில், கேண்மை முகம் காட்டி ஸ்ரீ விஸ்வநாதர் கிழக்கு நோக்கி இருக்கிறார். அவரது அண்மையில் ஸ்ரீ விசாலாட்சியார், சிறப்பாகத் தெற்கு நோக்கி, விஸ்வநாதரை என்றும் சேவிக்கும் கோலத்தில் இருக்கிறார்.

எண்ணுங்கள்! எம்பெருமானை என்போல் ஏத்துங்கள் என்று, வாழுமாறு ஆன்மாக்கட்கு அத்தேவியார் வழிகாட்டுகின்றார்.

அத்தேவியையும், விஸ்வ நாதரையும், அன்பொடு வணங்கி அகமகிழ்வம்.

## ஆறுமுக அத்தர்

ஸ்ரீவிசாலாட்சியார்க்கு அடுத்த சந்நிதியில், தாயின் பக்கத்தில் சேய்போல், எழுந்தருளி யிருக்கிறார் ஆறுமுகர். வலப்புறத்தில் வள்ளியார்; இடப்புறத்தில் தேவயானையார்; ஏறியிருப்பது மயிலின்மேல். பதினொரு உருத்திரர்கள் பதினொறு ஆயுதங்கள்; ஞான சக்தி, பிரதானமான வேல் படை. கருணை பொழியும் பன்னிரு கண் கொண்ட அந்த ஆறுமுக தெய்வத்தைக் காணக் கண்கள் கோடி வேண்டும்.

ஆறு திசைக்கும் அதிபதி; ஆறு அத்துவாக்களின் அமர்ந்தவர்; ஆறு ஆதார தெய்வம்; ஆறுபடை வீட்டு அரசர்; ஆறு எழுத்து மன்னர்; ஆறுபடை வீட்டினர்; ஆறுதல் அளிக்கும் ஐயர். ஆம், ஆம் என்று நாம் எண்ணும் அமயம், ஓம்! ஓம் பொருளே என்று ஒலிக்கிறது கோயில் மணி. கண்ணீரை அவர் திருவடிகளின் காணிக்கை யாக்கி,

"ஐயன் விழிபயந்த ஆறு முகமணியே!
கைகள்இரண் டாறுடைய கற்பகமே—செய்ய
வடிவேலா! வள்ளி மணவாளா! தெய்வப்
பிடிகேள்வா நீயே துணை"

என்று ஏத்திப் போற்றி இறைஞ்சுவம். அதன்மூலம், நம் கன்ம வினைகள் கால்வாங்கி ஓடும். அமைதி அடைவம். ஆநந்தம் கொள்வம்.

அதே சந்நிதியுள், ஸ்ரீவிநாயகர், ஆதி ஸ்கந்தர், ஸ்ரீவீரவாகு தேவர், அஸ்திர தேவர், கஜவல்லியம்மன், சண்டிகேசர், அருணகிரிநாதர் முதலிய உற்சவ மூர்த்திகளும், நமக்கு அமைதி யளிக்க இங்கு அமர்ந்துளர். வெள்ளைச் செம்பால் ஆன இரு பெரிய விளக்குகளின் ஒளி, இச்சந்நிதியுள் பிரகாசிக்கின்றது.

## ஸ்ரீ நடராஜர்

ஸ்ரீ ஆறுமுகர் சந்நிதியை அடுத்து ஸ்ரீசிற்சபேசர் சந்நிதி இருக்கிறது. ஸ்ரீசிவகாமியார், பார்த்த கண் வாங்காது அவரைப் பார்த்தபடியே இருக்கிறார். இவரே நலம் விளைக்கும் நாயகர். பாம்புக் காலரும் புலிக்கால் முனிவரும் தவ நிலையில் முப்போதும் தரிசிக்க, ஐந்தெழுத்துத் திருமேனியராய் அனவரத தாண்டவம் செய்யும் அத்தர் இவர். உயிர்கள் யாவும், இப்பிரபுவால்தான் உயிர்க்கின்றன. ஊன்றி இவைகளை உணர்கிறோம். நம் உள்ளம் பாகாய் உருகிவிடுகிறது.

'தொழுத கை தலைமேல் ஏறத் துளும்பு கண்ணீருள் மூழ்கி அழுது' திருவடி யடைந்த திருவாதவூர் அடிகள், ஆடல் அரசர் திருமுன் அன்புப் பிழம்பாய் நிற்கிறார்.

இந்த சந்நிதியில் பிரதோஷ நாயகர், சோமாஸ்கந்தர், சந்திரசேகரரது தனியம்மன் முதலிய உற்சவ மூர்த்திகள், இங்கு அற்புத சேவை யளிக்கின்றனர்.

எடுத்த பிறப்பு ஈடேற இங்குள்ள மூர்த்திகளைச் சேவித்த பின், மற்றுமொரு முறை ஆலயத்தை வலம் வந்து, துவஜ ஸ்தம்பத்தின் எதிரில் வீழ்ந்து வணங்கி, மவுனம் கொண்டு, முறையே சேவித்த மூலவரான மாபெரும் ஸ்ரீ பாலசுப்ரமண்யரை மனத்திற் பதித்து, ஆறெழுத்தை உருவேற்றி, இடையறாத ஈடுபாடு கொண்டார்க்கு, இம்மை நலனும், மறுமைப் பேறும், முத்தி வளனும் முறையே எய்தும் திண்ணம் இது.



ஸ்ரீ விநாயகர்



மாணிக்கவாசகர் ஸ்ரீ நடராஜர் ஸ்ரீ சிவகாம சுந்தரி



ராஜகோபுரம், தென்புறத் தோற்றம்



மூலவர் விமானமும், விநாயகர் விமானமும்

## சில்பச் சிறப்பு

ஒவ்வொரு ஸ்தூபியிலும், சுதை வேலைப்பாடு ஆன அழகிய சிற்பங்கள், அருமையான ஆஸ்திக ரகஸ்யங்களை அறிவிக்கின்றன.

கணபதி வழிபாடு, குமரன் திருமணக் கோலம், கலை மகளும் திருமகளும் கனிவு மிகுந்து வழிபட, ஸ்ரீ விசாலாட்சி விஸ்வநாதர் சேவை, வாய்மைச் சமய குரவர்கள் வழிபாடு, காம தகனக் காட்சி, ஆளுடைய பிள்ளையார்க்கு அருளமுதம் உண்பித்தல், பரம அனுபவப் பழனி யாண்டவர், பாற் கடலில் திருமால் பள்ளி கொள்ளல், அகலிகை சாப விமோ சனம், அட்டதிக்குப் பாலகர், சந்திர சூரியர், மாபெரும் இரதிக்கு மாங்கல்ய பிட்சை, ஸ்ரீசனகாதிகளுடன் தட்சிணு மூர்த்தி, ராதா ருக்குமணி ரம்ய கிருஷ்ணன், ஜானகிராமன் லட்சுமணனுடன் மாரீச மான், இலட்சுமி, பெரிய திருவடி, சிறிய திருவடி, இராம லட்சுமணர் விஸ்வாமித்திரருடன் விரும்பிச் செல்லல், கோபிகைகளுடன் வேணுகோபாலர், சீதேவி பூதேவியுடன் சேஷ பீடத்தில் திருமால், வள்ளி தினைப்புனங் காத்தல், நம்பிராஜன், வேல்முருகன் வேடனு தல், வளையல் விற்றல், கணபதி யானை, வள்ளி முன் முருக கிழவன், வள்ளியம்மை திருமணம், நாரதர்க்குச் சேவை தரல், காயத்ரி, சாவித்திரி சமேத நான்முகர், அர்த்தநாரீஸ் வரர், சங்கர நாராயணர் முதலிய அற்புத உருவங்கள் காண்பார் மனத்தைக் கனிவிக்கின்றன

## தல புராண வரலாறு

நான்முகன் காட்டிய நைமிச வனத்தில், தனிப்பெரும் முனிவர்கள் தவம் செய்து இருந்தனர். வியாஸர் மாணவரான சூத முனிவர், ஒரு நாள் அங்கு வந்தார். நீறணி மேனி. கண்மணி மாலை. சிவப்பழம் எனச் சிறந்த அவரை, கண்ட முனிவர்கள் களித்தனர். எழுந்து இறைஞ்சினர். வரவேற்ற னர். பதினறு உபசாரமும் பண்ணினர். அரிய பீடத்தில் அமர்த்தினர். பெரும! தணிகைச் சிறப்பை, முன்பொரு சமயம் அருளொடு அடியேங்கட்கு அறிவித்தீர்! அச்சமயம்,

அகண்ட செல்வத்தை அருள்வது ஆண்டார்குப்பம் என்று, தேனினும் இனிய மொழிகளால் தெரிவித்தீர்! இனிய அப் பதி எங்குளது? அதன் மகிமை யாது? அங்கு வழிபட்டோர் யார்? அடைந்த பேறு யாது? அடியேம் இன்புற அறிவித் தருளும்! அந்தச் சிரவண விருந்தை, எங்கள் செவியும் சிந்தையும் அவாவுகின்றன என்று, வீழ்ந்து பணிந்து விண்ணப்பித்தனர்.

## தலச் சிறப்பு

அதைச் செவியேற்ற சூத முனிவர், புந்தி மகிழ்ந்தார். புளகிதம் அடைந்தார். குளிர்ந்தது மனம். சிரமேல் கரம் குவித்தார். சிவ சிவ என்ருர். பொங்கிய இன்பக் கண்மழை பொழிந்தார்.

தவப்பெரு மக்களே! இடையிடை இப்படி வினுக் களை எழுப்பி, அரிய சிவ புண்ணியத்திற்கு எம்மை ஆளாக்குகின்றீர்கள். வாழி இவன் வாய். வாழி இவன் மனம். வாழி இவன் உடல் என்று, எம்பெருமான் அடியேற்கு உங்களைக் கருவியாக்கி அருள்கின்ருன்.

வைகறையில் எழுவம். வைதிகம் செய்வம். ஒருமை மனம் உண்டாகும். அந் நிலையில், ஆண்டார் குப்பத்தை அணுகுவம். அக மனம் அப்போதே அமைதி யடையும். அந்த உணர்வுடன், ஒரு அடி பெயர்த்து வைத்ததும், ஆகாமிய வினை அடியொடு அழியும். அத்தல எல்லையை எய்தியதும், மாயையின் சேட்டை மடங்கி யடங்கும். அங்குள மூர்த்தியை ஆர்வம் கொண்டு சேவித்தால், ஆணவ இருள் அகன்று போய்விடும். விசாகம், சஷ்டி, பரணி, கிருத்திகை நாட்களில், பயனுன இத்தலத்தில் உள்ள பால நதியில் நீராடி, திருநீறணிந்து, சிவ சின்னம் தரித்து, புள்ளி மயில் ஏறும் புனித முருகனைப் போற்றுவோர், எல்லாச் செல்வங்களையும் எய்துவர்.

ஸ்ரீ பாலசுப்ரமண்யப் பரமன் கம்பீரத் திருவழகைக்க காணும் கண்களே கண்கள். நெஞ்சாரத் தியானிக்கும்

நெஞ்சமே நெஞ்சம். நம்பன் அருள்பாடும் நாவே நா என்று, அவனது அருள் நலம் ஓதும் உள்ளம் பாகாய் உருகிவிடும்.

இத்தலத்தில் செய்யும் தருமங்கள் சிறிதளவாயினும், அது பேரளவாகிப் பெரும்பயன் அளிக்கும். நம்பன் அடியவர்க்கு இங்கு நல்லமுது ஊட்டுவோர், அளவிலா புண்ணியங்கட்கு ஆளாவர்.

இங்குப் பெருமானை வழிபடும் சிறந்த அந்தணர்களைச் சேவித்தாலும், தானம் இயலும் அளவு தந்தாலும், மாதேவர் திருவுள்ளம் மகிழ்வுறும்.

அத்தல மகிமையை, என் குருநாதர் வியாசர் அறிவிக்க, அடியேன் அறிந்தேன். ஓத இயலா அதன் உயர்வுகளை, தெய்வப் பெருமான் திருவருளும், பெருந்தவ வியாசர் பேரருளும் முன்னிற்க, ஓரளவு கூறுகிறேன் என்று, சூதர் மேலும் சொல்லத் தொடங்கினர்.

## திருக்கைலாயச் சருக்கம்

விண்ணளாவித் திருக்கயிலாயம் விளங்குகிறது. வேத தேவதைகள், ஓம் ஓம் என்று, ஏதம் தீரச் சிவத்தை அங்கு ஏத்துகின்றனர். சிவகணத்தர்கள், அதைச் சதா சிந்திக்கின்றனர் என்றும் வந்திக்கின்றனர். கூட்டம் கூட்டமாக வானவர் முனிவர்கள், கூடிப் பெருமானைக் கும்பிடுகின்றனர்.

அமுதக் கடலே! அருள் வெள்ளமே! சுத்த சித்த அத்தனே! நாத வேத போதனே! அடைக்கலம் பெருமா! அடைக்கலம் என்று, சிவத்தை ஆராதிக்கின்றனர்.

மாதேவீ! சாம்பவீ! சதாநந்தீ! நித்திய கல்யாணீ! ஆரணீ! அகில உலக காரணீ! அடைக்கலம் அம்பா! அடைக்கலம் என்று, வீரிட்டுக் கூவி விநயம் காட்டுகின்றனர் பலர்.

## பால குமர லீலை.

அவ்வமயம், எம்மான் குமரன் எழுந்தான். கலகல என்றன திருவடிச் சிலம்புகள். கிண்கிண் என்றன கிண்கிணிகள். கனிவு மிகுந்த அன்பர்கள் கைகுவித்தனர்.

திடீரென்று, கந்தப் பரமன் திருவுருவம் கரந்தது. என்ன வியப்பு! எங்கே குமரன்? எங்கே? எங்கே என்று, ஏக குரல்கள் எங்கும் எழுந்தன.

அதோ அதோ என்றனர் சிலர். ஆம். பரிதியின் தேரில், முருகன் திருவுரு பளபளக்கின்றது. பார்த்து மகிழ்கின்றனர் பலர்.

ஆ! எங்கே? அங்கிருந்தும் மறைந்தனனே! என்ற ஏக்கம் மறுபடியும் எழுந்தது.

இதோ, இதோ, சந்திர மண்டலத்தில் இருக்கின்றான் என்றார் சிலர். ஆம். ஆம் என்று அறிந்து பலர் ஆநந்தித்தனர். முருகா! முருகா என்று, போற்றி மகிழ்ந்து புளகிதர் ஆயினர்.

என்ன வியப்பு! எத்தனை முருகன்? எண்ணிலா மூர்த்திகளில் இருந்தபடி, எங்கும் பவனி வருகின்றானே! அரிய ஐம்பூதங்களில், அவன் ஆடல் அருமை அமைகிறது. சத்திய உலகில் சார்கின்றான்; வைகுந்தத்திற்கு வருகின்றான். தேவ உலகில் தீரநடை யிடுகிறான். மேல் ஏழு உலகில், கீழ் ஏழு உலகில் மேவுகிறான். ஏக காலத்தில் பெருமான், எங்கும் காட்சி யாகிறான். வெள்ளி மலையில் ஏறுகிறான். விந்திய மலையில் விளங்குகின்றான். ஆ. என்ன அற்புதம்! இறுதியில் செய்தி யாது? அதோ புனித கந்த கிரிக் குகையுள் புகுந்தான். காளத்தியின் அண்மையில் உள்ள விண்ணளாவிய ஒரு மலைமேல் வெளிப்பட்டான்.

## திருவேங்கடச் சருக்கம்

கம்பீர ஞானியான கபிலர், தனிப்பெரும் அம் மலையில் தவம் செய்து கொண்டு இருக்கிறார். கண்முன் காட்சியான கந்தப் பிரானைக் கண்டார். களித்தது அவர் மனம்.

எழுந்தார். எட்டுறுப்பும் நிலம் தோய விழுந்தார். ஆறு எழுத்துப் பெயராளா! அருளார் கோலத் திருவாளா! புனித மெய்ம்மைப் பொருளாளா! இன்ப முதலே! இறைவா! எளியேற்குச் சேவை தர, இப்படியும் ஒரு அருளாடலோ ஐயா!

பாதலத்தில் பரமேஸ்வரரை, ஆத்மார்த்தமாக ஆராதித்தேன். தற்பரர் திருவுருவம், ஒரு நாள் தம்பாகார மாக எழுந்தது. உயர்ந்த அது, மேலும் மேலும் உயர்ந்து கொண்டே இருந்தது. என்ன அதிசயம்! தூய அத் தம்பத்தை, என்னை அறியாதே தொடர்ந்தேன். அது, உயர்ந்த இம் மலையை ஊடுருவி, உச்சியில் விளங்கி ஒளிர்ந்தது.

பாதலத்தில் இருந்த பரன், அகில உலகர்க்கும் அருள, இப்படியும் ஒரு கோலம் கொண்டானே என்று, எண்ணி மகிழ்ந்து இன்புற்றேன். நிமலன் கருணையை நினைத்தேன். இங்கேயே வழிபட்டு இருந்தேன். எதிர்பாராத நிலையில், இங்குத் தேவரீர் எழுந்தருளினீர்!

சத்துள்ள இடத்தில் சித்து; சித்தின் இடத்தில் ஆநந்தம். என்ன அற்புதம்!

முருக குமர குகா! வந்து தன்னைச் சேவிப்பார்க்கு வாழ்வையருள, இக் கோலத்துடன் இங்கு நீர் எழுந் தருளியிரும் என்றார்.

புன்னகை செய்தான், புனித முருகன். கபிலா! சிவம் விளங்கும் சிறந்த இத் திருப்பதியில், என்றும் யாம் இருப்பம். விநய வழிபாடு செய்பவர்தம் வினையின் ஆட்சி வீழ்ந்து படும்; அதனால் இம்மலை, திருவேங்கடம் என்ற திருப் பெயர் பெறும். (வேம்—பாவம்; கடம்—எரித்தல்.)

அளவிலாத் திருவை, இங்கு ஆராதிப்பார்க்கு அருள்வம் யாம்! நான்மறைகள், இங்கு வேங்கட சுப்பராயர் என்று வாழ்த்தி நம்மை வழிபடும் என்று அருளி, எம்மான் முருகன் அங்கு ஏக மங்கள விக்ரகம் ஆயினன்.

விண்ணவர்கள், இவ்விவரம் அறிந்தனர். விரைந்தனர். திருவேங்கடக் குமரனை, ஏத்திப் போற்றி இறைஞ்சினர். அவரவர் பரிபாகத்திற்குத் தக்கபடி, அவ்விக்ரகம் இன்றும் சேவை தருகிறது.

சைவர்கட்கு, அது சிவபெருமான் திருவுருவம். ஸ்ரீ வைஷ்ணவர்கட்கோ திருமாலின் திருமேனி.

"ஏறு ஆளும் இறையோனும் திசைமுகனும் திருமாலும்
கூறு ஆளும் தனியுடம்பன்" என்றும்,
"தாழ்சடையும் நீண்முடியும், ஒண்மழுவும் சக்கரமும்,
சூழரவும் பொன்னுணும் தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்ருய் இசைந்து" என்றும்,
"அரன் நாரணன் நாமம்; ஆன்விடை புள்ஊர்தி;
உரைநூல் மறை; உறையும் கோயில்—வரைநீர்;
கருமம் அழிப்பு அளிப்பு; கையது வேல் நேமி;
உருவம் எரி கார்மேனி ஒன்று" எனவும்

இங்குள பெருமானைச், சிவவிஷ்ணு சொரூபமாக ஆழ்வார்கள் இனிது அறிந்து ஏத்தினர்.

சாக்தேயர்கள், இம்மூர்த்தத்தை, உமையாள் சொரூபமாக உணர்கின்றனர். வைஷ்ணவி, கௌமாரி எனும் இரு சக்திகள், அரிய இந்த ஆலயத்தில் ஆவிர்ப்பவித்துளர். கோயில் திருமதில்களில் இருக்கும் சிங்கச் சிற்பங்கள், இதை உணர்ந்து சிரிக்கின்றன. வேங்கடாசல பதிக்கு இங்கு வெள்ளிக்கிழமையில் அபிஷேகம். திருப்பரிவட்டம் முப்பத்தாறு முழம். இக் கணக்கு தேவிக்கே உரியது என்று, ஆகமங்கள் இனிது அறிவிக்கின்றன. அந்த ஆடையில் பச்சை கற்பூர மணம் பரிமளிக்கின்றது. இத்தகைய காரணங்களால், இது சத்தி க்ஷேத்திரமே என்று அறிந்து கூறுகின்ருர் பல அறவோர்.

இம் மூர்த்தத்தை, வேண்ட வெருது உதவும் முருகனுகவே பரிந்து திருப்புகழை அருணகிரியார் பாடுகிருர்.

இவ்வரலாறுகளால், சிவமாய், சக்தியாய், திருமாலாய் முன்னிற்கின்ருர் முருகபிரான் என்று, ஓதி முருகன் அடியார்கள் உவகை யுறுகின்றனர். இது குறித்து, திருச்செந்தூர்ப் புராணம் விரிவாகச் செய்துள விளக்கங்கள், என்றும் எவரும் எண்ணற்குரியன.

## சம்வர்த்தனச் சருக்கம்

அந்நாளில் காங்கேய சிவாசாரியார், பாவகி சிவாசாரியார், சுந்தரேச சிவாசாரியார், குருபர சிவாசாரியார் எனும் ஆதி சைவர்கள் நால்வர், திருவேங்கட அர்ச்சகர்களாக அமைந்தனர். வழிபாடு அவர்களால் வளர்ந்தது. பல காலம் இந்நிலை.

குருபர சிவாசாரியார் துணைவி, சுசீலை. அவர் உத்தமக் கற்பால் உயர்ந்தவர். பரம பக்தை. ஒற்றுமையான தம்பதிகளின் நல்லற இல்லறம் நடந்தது. அதன் பயனுகப் பிறந்தது ஒரு பிள்ளை. சாதகம் ஆதிய நடந்தன. பிள்ளையின் பெயர் சம்வர்த்தனர். உரிய வயதில் உபநயனம் நடந்தது. தந்தையே மைந்தனுக்கு குருவானுர். கற்கத் தக்கவைகளை முறையே கற்பித்தார். காலம் பார்த்து, நலம் தரும் சிவ தீட்சை நடந்தது.

பொல்லாத காலம் சொல்லி விட்டு வருவது இல்லை. ஒரு நாள் உலகம் இருண்டது. உடல் தளர்ந்தது. சிவ சிவ சிவ சிவ என்று சிந்தித்தபடியே, குருபர சிவாசாரியார் பேருயிர் உடலை விட்டுப் பிரிந்தது. இயற்கை எய்திய திருமேனிக்கு, எல்லா மரியாதைகளும் நிகழ்ந்தன. இறுதிச் சடங்கும் நடந்தது. குருபூசையையும் அன்பர்கள் கொண்டாடினர். அதனேடு தீர்ந்தது அவர் வரலாறு.

மற்றைய குருக்கள்மார் மூவரும், புனித வேங்கட சுப்புவைப் பூசித்தனர். சம்வர்த்தனர் இளஞ்சிறுவர். அதனுல், சிவ பூசைக்கு அவரைச் சேர்த்திலர். எனினும், உரிய ஊதியத்தை மட்டும் உதவினர்.

திருநீறு, உருத்திராட்ச மாலை, ஐந்தெழுத்து ஜபம், ஆகம ஞானம், மெய்யுணர்வு, ஆசார சீலம், அடக்கம் எனும் அருங்குணம் முதலியன, வயதிற்குத் தக்கபடி சம்வர்த்தனரிடம் வளர்ந்தன. அந் நிலையிலும் பூசை முறையை, மூன்று குருக்கள்களும் அவர்க்குக் கொடுக்கக் முரணினர். தந்தையின் உரிமையை மைந்தர்க்குத் தருக என்று, அவர் எங்களிடம் அறிவிக்கவில்லை. உபகார ஊதியத்தை, இதுவரை இரக்கத்தால் ஈந்தேம். இனி அதுவும் இல்லை என்று, கோர ஆரவாரம் செய்து கொக்கரித்தனர்.

அவர்கள் மனநிலை யறிந்த சம்வர்த்தனர், அறுமுக குருபரா! முருக திவாகரா! வேங்கட சுப்பு! அருளார் உமது திருவுளம் போல் ஆகட்டும் என்று, அமைதி யடைந்தார். தாய் சுசீலை மனம். இது கண்டு தளர்ந்தது. என்ன செய்வது? ஒன்றும் தோன்றவில்லையே!

ஒரு நாள் மாலை நேரம். சுசீலை, முதல்வன் திருமுன் வந்தாள். தன் கணவர் தொட்டு வழிபட்ட தூய மூர்த்தியை, இன்று தன் பிள்ளை வழிபட உரிமை இல்லை. நினைத்தாள். கலகல என்று கண்ணீர் வழிந்தது.

அகில உலகையும் ஆண்டவனே! கதியற்ற எங்களைக் கடைக்கணிக்க மாட்டாயா? அடியேன் மகனை ஆளாக்கிக் கொள்ளாயா? உம்மைத் தவிர எங்கட்கு வேறு கதி ஏதையா? என்று, விம்மிப் பொருமி வீழ்ந்தாள். எழுந்து தொழுதாள். இல்லம் திரும்பினுள்.

அன்று இரவு உணவு அருந்திலள். உறக்கம் துறந்தாள். சிவ குமரா! உமா சுதா என்று, இனிது முனகி இருந்தாள்,

விடியற் காலம். நான்கு மணி. பொய்த்துயில் சிறிது போர்த்தது, ஒளி மயமான திருமேனியுடன், கனவில் வேங்கட சுப்பு அவள் முன் காட்சி யாயினன்.

சுசீலா! நின் எண்ணம் நாளை நிறைவேறும்! என்று அருளி, திடீரென்று உருக்கரந்தான் திருக்குமரன்.

திடுக்கிட்டு விழித்தாள். வியர்த்தது மேனி. என்ன அதிசயம்! என்னையும் பொருளாக்கி, எம்பெருமான் வந்தானே! அரஹர குமரா அரோஹரா என்று, ஆநந்தக் கண்ணீர் பெருக்கி எழுந்தாள்.

வைகறையில், முதன்மைக் கடனை முடித்தாள். நீராடினாள். நியதி செய்தாள். அதே நேரத்தில், வந்து வணங்கிய சம்வர்த்தனரை வாரி எடுத்தாள். அகமும் முகமும் மலர ஆசி செய்தாள். அவ்வமயம் படபடத்தது அவள் திருமேனி.

அம்மா! உங்கள் திருவுருவம் ஏன் இப்படி நடுங்குகின்றது என்றார் சம்வர்த்தனர்.

காரணம் இருக்கிறது என்று, எதிரில் ஒரு குரல் எழுந்தது.

யார் அது? திடுக்கிட்டது மனம். இருவரும் தெருவை நோக்கினர். ஆம். அவ்வளவு காலையில் அரசர் அல்லவா வந்திருக்கிறார்.

வருக அரசே! என்ன இது? புல்லிய எங்களையும் பொருளாக்கி, இங்கு விஜயம் செய்தீர்கள்? என்று அலறினர் சம்வர்த்தனர்.

சம்வர்த்தனரே! தங்களிடத்தும் தங்கள் தாயிடத்தும், எம்பெருமான் திருவருள் பரிபூரணமாக இருக்கிறது. வழிபடும் உரிமையை வாங்கித் தா என்று, கனவில் வேங்கட சுப்பு அடியேற்குக் கட்டளை யிடுகிறார். உங்கள் இருவராலும், பேறுன அச் சேவையை அடியேன் பெற்றேன் என்று, அன்பு மிகுதியால் கண்ணீர் சிந்தினர் காவலர்.

பெற்ற அன்னையின் பிரார்த்தனை இப்படி பிரதிபலிக்கிறது என்று, சம்வர்த்தனர் அறிந்தார். தாயைப் பணிந்தார். அரசரைத் தொடர்ந்தார்.

பக்தவத்சலா! பரம குமரா! ஏழை பங்காளா! திகழும் உனது திருவருள், விளங்கிச் செயல்பட விரைகிறதா என்று, இன்பங் கொண்டு சுசீலை இறைஞ்சினள்.

அரசர், சம்வர்த்தனருடன் ஆலயத்தை யடைந்தார். அவர்கள் வருகையை அர்ச்சகர்கள் அறிந்தனர். பெரிதும் அஞ்சினர். மன்னர் பெரும! வருக, வருக என்று வரவேற்றனர்.

தந்தையின் வழிபாட்டு உரிமையை, தநயர்க்குத் தருவதில் தடை யாது? என்ருர் தரணிபர்.

தாங்களே விஜயம் செய்து அறிவித்த பிறகுதான், எங்கள் செயல் தவறு என்று அறிகிறோம். இன்றே, இப்போதே, அவ்வுரிமையை அளிக்கிறோம் என்று, ஒரு வாயாக மூவரும் ஓதினர்.

அன்றைய வழிபாட்டிற்கு உரிய திரவியங்களை, அரசர் அமோகமாக வரவழைத்து அளித்தார். விதிப்படி சம்வர்த்தனர், பூஜையை விரிவாக நிகழ்த்தினர். அன்று பெருமான் திருமேனி, ஏகமான ஜோதி மயம். காவலர் முதல் யாவரும் கைகூப்பி வணங்கினர். பக்தி பெருகிப் பரவசர் ஆயினர்.

அன்று முதல் சம்வர்த்தனர், தந்தையின் ஸ்தானத்தை நிரப்பினர். தாயின் உள்ளம் மகிழ்ந்தது. நலமான வழிபாடு, இப்படியே நான்கு ஆண்டுகள் நடந்தன.

திருவேங்கடத்திற்குக் கிழக்குத் திசையில் சிந்தாமணி என்பது ஒரு சிறு கிராமம். சம்வர்த்தனருடைய நல்லம்மான் ஒருவர், இனிய அவ்வூரில் இருக்கிருர். ஒரு சமயம், அவரைப் போய்ப் பார்த்து வரவேண்டிய அவசியம் நேர்ந்

தது. அதனுல் சம்வர்த்தனர், தனக்குரிய வழிபாட்டு முறையல்லாத காலம் பார்த்து, புறப்பட்டார். நாள் சில நடந்தன; காதம் பல கடந்தார். போகிருர். போய்க் கொண்டே இருக்கிருர். மாலைப் பொழுது மலர்ந்தது.

அந்தி நேரம் ஆதலின், சந்தியா வந்தனம் செய்ய வேண்டும். காலத்தில் கடமையைச் செய்யத் தவருத அவர்க்கு, எங்குத் தேடியும் நீர் அகப்படவில்லை.

என்ன பாபம்! ஒரு குடம் நீர் கிடைத்தாலும் போதுமே! ஆண்டவனே! இது என்ன சோதனை? என்று, வருந்திக் கண்ணீர் வடித்தார்.

எதிரில் ஒரு வைதீகச் சிறுவன், எங்கிருந்தோ வந்தான். காணத் தக்க கட்டழகுத் திருமேனி. சம்வர்த்தனர் அவனைக் கண்டார். காளையைக் கண்ட கண்கள் களித்தன.

இளஞ் சிறுவா! யாரும் உனக்குத் துணை இல்லையா? எங்கே போகிருய்? என்ருர்.

ஐயா! என் தயவை எவரும் எதிர்பார்க்கின்றனர். காரியம் ஆகும்வரை, ஐயா! அப்பா! அத்தா என்பர். கைகள் குவிப்பர். காலில் விழுவர். நினைக்கும் அவர்கள் எண்ணத்தை நிறைவேற்றுவேன். அன்பர்கள் என்று அவர்களை அணுகுவேன். மகத்தான என் உதவியை மறந்த அவர்கள், ஏனென்று கேளார்; ஏறெடுத்தும் பாரார்.

மறுபடியும் ஒரு கவலை வரும்போது, மறந்த என்னை மறுபடி நினைப்பர். அழுவர் தொழுவர். ஆடிப் பாடுவர். மாபெரும் மோசமான மன நிலையர். இவர்கள் குறைகளை, உடனுக்குடன் யான் மறந்து விடுவேன்.

எப்படியோ அது இருக்கட்டும்! நீர் யார்? முகம் வாடி இருக்கிறதே! என்ன கவலை? சொல்லுங்கள்! தீரா அக்கவலையை நானே தீர்த்து விடுகிறேன் என்று, விறு விறு என்று சிறுவன் விளம்பினன்.

சிறுவன் பேச்சு சம்வர்த்தனருக்குச் சிரிப்பை விளைவித்தது. பிள்ளாய்! பிறகு பேசலாம். முதலில் சந்தி செய்ய வேண்டும். இங்கே எங்கேனும் நீர் இருக்கிறதா பார் என்றார்.

இதோ ஒரு நொடியில் வருகிறேன் என்று, சிறுவன் அங்கிருந்து ஓடினன். சென்ற வேகம் போல் விரைந்து திரும்பினன். கலங்கி நிற்கும் சம்வர்த்தனரைக் கண்டான். கலகல என்று நகைத்தான்.

ஐயா! இப்படியே சென்றால், அண்மையிலேயே ஒரு சிற்றாறு இருக்கிறது. அங்கே போம். முதலில் அனுட்டானத்தை முடித்துக் கொள்ளும். நீர் வரும்வரை இங்கேயே நிற்கிறேன் என்று, அவரைச் சிறுவன் அவசரப் படுத்தினன்.

என்ன வியப்பு! வெகு தூரம் தேடினேனே! அப்போது இல்லாத ஆறு, இப்போது எப்படித் திடீர் என்று எழுந்தது. அதையுந்தான் பார்ப்போமே என்று, சிறுவன் குறித்த திசை நோக்கிச் சென்றார்.

என்ன வியப்பு! சிலு சிலு என்று செல்கிறது ஒரு சிற்றாறு. மகிழ்ந்தது மனம், வாய் சிறுவனை வாழ்த்தியது. நீரில் இறங்கினார். நியதி செய்தார், முதன்மை ஜப தபங்களை முடித்தார். சிறுவன் இருந்த திசை நோக்கித் திரும்பினார்.

எங்கே அவன்? கண்கட்கு எட்டிய தூரம் தேடினார். அகப்படவில்லையே! என்ன வியப்பு!

இதற்குள் எங்கு சென்று இருப்பான்? அடடா! அவன் பெயரைக் கூட விசாரித்துக் கொள்ளாமல் விட்டு விட்டோமே என்று, எண்ணுதும் எண்ணியது புண்ணிய நண்ணிய அவர் புனித மனம்.

கலகல என்ற நகை, எங்கும் எதிரொலியை எழுப்பியது.

திடுக்கிட்ட சம்வர்த்தனர், திரும்பி நோக்கினார். எதிரில் ஒரு சரக்கொன்றை. அதன் அடியில் திருவேங்கடவர், எடுப்பான கோலத்தில் இருக்கிறார்.

என்ன இது! கனவா நனவா காண்பது நான்? இமையாது நோக்கினர். ஆம். வேங்கட சுப்புதான். வியந்தார். விமலன் திருவடிகளில் விழுந்தார்.

அத்தா! அருளரசே! இது என்ன கூத்து? இங்கு எப்படி எழுந்தருளினீர்? பேதையே! நீ என்னைப் பிரிய மனம் துணிவாய்! என்னால் உன்னைப் பிரிந்திருக்க இயலவில்லையே என்று, அறிவிக்கும் ஆடலோ ஐயா இது? என்று அலறினர்.

அன்ப! நீ புனித திருவேங்கடத்தை விட்டுப் புறப்பட்டது முதல், அருளுடைய எம்மை நீ அறியாதபடி, தூய உன்னைத் தொடர்ந்து வந்தேம். தண்ணீர் வேண்டும் என்று தவித்தாய். உதவ நினைத்தேம். இளைஞன் ஆயினம். ஊக்கிய வேலால், ஒரு ஆற்றை உண்டாக்கினம். இவ் வரலாறு, எவர்க்கும் என்றும் நினைவில் இருக்க, இனி இங்கேயும் எழுந்தருளி இருப்பம்.

இன்று முதல், திருவேங்கடத்தில் இருக்கும் முருக சொரூபம், திருமால் உருவாய்ச் சேவை தரும். யாம் தோற்றுவித்த இச் சிற்றாறு, இனி பாலநதி எனும் பெயரடையும்.

ஒரு உருவும் ஒரு பெயரும் இயல்பில் இல்லாத யாம், உன் போன்ற அன்பர்கள் பொருட்டுப் பல உருவும் பல பெயரும் கொள்வம். அவைகளுள், அரிய பெரிய தவத்தினர் நம் பதினறு திருவுருவைப் பார்த்தவர்கள். பயனுன அத் திருவுருவங்களுள் ஒன்று, ஸ்ரீ பாலசுப்ரமண்யத் திருவுருவம். இனி, அக்கோலத்தில் இங்கு இருப்பம். மற்றும் ஒரு செய்தியுண்டு. கேள்!

## பிரணவ சருக்கம்

ஒரு சமயம், அதிகம் கற்றேம் என்று பிரமன் அகங்கரித்தான். தற்பரன் சந்நிதியிலும் தலை நிமிர்ந்து சென்றான்.

அதை அறிந்தேம்; அவனை அழைத்தேம்; என்ன தொழில் செய்வது நீ என்றேம்: நானிலம் படைப்பவன் நான் என்றான். உலகைப் படைப்பவன், மறைகளை ஓத

வேண்டுமே! உணர்வாயோ நீ என்று உசாவினேம், நன்கு வரும் என்று, அயன் எம்முன் நாணம் இன்றிக் கூறினன்.

அங்ஙனமேல், அம் மறைகளை ஒரு சிறிது ஓது பார்ப்பம் என்றேம்.

ஆரம்ப சம்பிரதாயப்படி, ஓம் என்றான். போதும் நிறுத்து! ஓதிய ஓம் பொருளை, முதலில் ஓது! அருமறைகளை, அதன்பின் ஆரம்பிக்கலாம் என்றேம்.

நகைத்த நான்முகன், ஓம் என்பதன் பொருள் நான் என்றான்.

வீரவாகு! விவரம் அறியா இவனுக்கு, வேதன் என்ற பெயர் வீண். அறிவு மயங்கினேன் அகிலத்தைப் படைப்ப னேல், படைப்பான் மயக்கம் படைக்கப்படு பொருளிலும் படரும். பிடி இவனை! உடனே சிறையில் அடை என்று ஆணையிட்டேம்! சிறக்க அச் செயலை வீரவாகு செய்து முடித்தான்.

அதன்பின் திருவேங்கடத்தில் இருந்தபடி, அகில உலகையும் யாமே ஆக்கினம். இடையில் உருண்டு பல காலம் ஓடியது.

ஒரு நாள் எந்தையார் எம்முன் எழுந்தருளினர். வணக்கம் செய்து அவரை வரவேற்றேம்.

குமரா! வீணுரை யாடிய அவனுக்கு, தக்க தண்டமே விதித்தனை. தேம்பி அழுது அவன் இப்போது தெளிவடைந் துளன்: பட்டது போதும்; இனி அவனை விட்டு விடு என்றார். அவ்வாறே விரிஞ்சனுக்கு விடுதலை தந்தேம்.

யாம் பிரமனைக் கேள்வி கேட்ட அமயம் கொண்ட கோலமே இப் பாலசுப்ரமண்யத் திருவுருவம். இரு கரங்களை யும் இரு தொடைகளின் மேல் வைத்த அக் கோலத்தை, இன்று நீயும் அறியக் காட்டினம்.

இவ்வனத்தை அடுத்த காட்டாவூரில், இருந்தான் ஒரு தவ முனிவன். அவன் பெயர் உரோமசன். விநயம் காட்டி அவன் வேண்டியபடி, கம்பீர நம் பாலசுப்ரமண்யத் திருவுருவை அவனுக்கு ஒருசமயம் காட்டியுளம்.

அன்பனுன உன்னை ஆட்கொண்ட இந்த இடம், இனி சுப்பிரமண்யபுரம் என்ற பெயர் பெறும். இதனை நீ அறிந்து கொள்! புரிந்துகொள் என்று அருளியபடி, சரக் கொன்றை மரத்தடியில், விமலன் திவ்ய தேஜோ மங்கள விக்ரகமாக விளங்கினன்.

மலர்மழை பெய்தது வானம். அரஹர முருகா ஹரோஹரா என்று, போற்றி விண்ணவர் புளகிதம் எய்தினர். இன்பக் கண்ணீரைக் கண்கள் இறைக்க, கரம் இரண்டும் சிரமேற, தொழுது சம்வர்த்தனர் பெருமானைத் துதித்தார்.

பெருமா! இன்று முதல் உம்மை என்றும் பிரியேன் என்ருர். அறிவித்தபடியே சுப்ரமண்யபுரம் எனும் ஆண்டார் குப்பத்தில் தங்கினுர்.

கண் பெற்ற பயன் எனுமாறு, பால நதியைக் கண்டார். களித்தார். இது மாபெரும் ஆனந்த சாகரம் என்று மகிழ்ந்தார். இறங்கி நீராடினுர். உடல் புளகிதம் எய்தியது. கரையேறினுர். உலர்ந்த ஆடையை உடுத்தார்.

புனிதத் திருநீற்றைப் பூசினுர். அங்கங்களில், கண்மணி மாலைகளை அணிந்தார். புறப்பட்டார். குணமும் மணமுமான மலர்களைக் கொய்தார். பழுத்த கனிகளைப் பறித்தார்

புனித சந்நிதியுள் புகுந்தார். ஸ்ரீ பாலசுப்ரமண்யத் திருவுருவை, அன்பு மிகுந்து அபிடேகித்தார். அகமிக மகிழ்ந்து அலங்காரம் செய்தார். தூப தீப நைவேதனம் ஆதிய சோடச உபசாரங்களை, மானசீகமாகவும் நடத்தி மகிழ்ந்தார். பரமன் திருமேனியை, பார்த்த கண் வாங்காது பார்த்தார். ஆநந்தாதிசயம் வெளிப்பட அனுபவித்தார்.

ஐயனே! எளிய என்னை ஆண்டு கொண்ட மெய்யனே! தொன்மை அருள் காட்டும் துய்யனே! ஆறு எழுத்தின் நாம அரசே! அடைக்கலம் பிரபோ! உமக்கே அடைக்கலம் என்று வாயார மனமார வாழ்த்தினர். வணங்கினர். அன்புடன் இப்படியே நாள்தோறும் ஆராதித்தார்.

அரிய இந்த ஈடுபாடு அதிகரித்தது. வரவர உலகை மறந்தார். தன்னையும் துறந்தார். இன்ப வழிபாட்டில் இருந்தார்.

வனத்தில் பெருமான் வந்ததும், வழிபாடு நாள் தோறும் வளர்வதும், அண்மிய கிராம மக்கள் அறிந்தனர். அன்பர்கள் திரண்டனர், ஸ்ரீ பால சுப்ரமண்யப் பரனது உள்ளம் அள்ளும் கோலம் கண்டு, உருகினர். பாதாதி கேசங்களின் பரம அருளைப் பாடிப் பரவினர்.

ஆண்டார் குப்பத்து ஆண்டவன், சம்வர்த்தனரை ஆண்ட திறம் எண்ணி வியந்தனர். எம்பெருமானை ஏத்திப் போற்றி இறைஞ்சினர்.

திருவேங்கடத்தில் இருந்த சம்வர்த்தனரின் அன்னை சுசீலை, வருவார் போவார் மூலம் விவரம் அறிந்தாள்.

அத்தன் எம் பெருமான், என் பிள்ளையை ஆட்கொள்ளல் செய்தானு! என்று ஆநந்தித்தாள்.

புந்தி களித்துப் புறப்பட்டாள். ஆண்டார் குப்பத்தை அடைந்தாள். மைந்தர் நிகழ்த்தும் கனிந்த வழிபாட்டைக் கண்டாள். கண் மழை சிந்தி, எம்மானைச் சேவித்து இன்புற்றுள்.

வழிபாடு முடிந்த பின், எதிரில் இருந்த தாயைக் கண்ட தனயர், அவள் தாளில் விழுந்தார்; அன்னை எடுத்தாள். அன்பின் அணைத்தாள். வரத முருகனை வழிபட்டு, வழிவழி மரபை வாழ வைத்த செல்வமே! நீ வாழி ஊழி என்று வாழ்த்தினுள்.



ஸ்ரீ விஸ்வநாதர்



ஸ்ரீ விசாலாக்ஷி



ஸ்ரீ வள்ளி தேவசேனு சமேத சுப்பிரமணியர்
(உற்சவர்)



ஸ்ரீ வள்ளி தேவசேனு சமேத ஆறுமுகர்
(உற்சவர்)

ஆலயத்தின் அண்மையில், இருவரும் ஒரு குடில் அமைத்தனர். எம்பெருமானை இரவும் பகலும் ஏத்தி இருந்தனர்.

அன்பர்கள் பெருகினர். வழிபாடு அவர்களால் வளர்ந்தது. அருள் வடிவ அம்மானை, அன்பின் உள்ளங்கள் ஆராதித்த பயனாக, ஸ்ரீ பாலசுப்ரமண்யர் திருமேனி, அருளார் ஜோதியாகி அமைந்தது.

ஒரு நாள் ஆலயத்தை சுத்தி செய்த அன்னை, ஆமயத்தால் மெழுகிக்கோலமிட்டுக் குதூகலித்த தாய், மலர் பறித்து மாலை கட்டி, அன்புள மைந்தர் மூலம் ஆண்டவனை அலங்கரிக்கச் செய்து, கண் பெற்ற பயன் என்னக் கண்டு சேவித்த சுசீலை, ஒரு நாள் மைந்தர் முகத்தை மகிழ்ந்து நோக்கினள்.

அப்பா! அருளழைப்பு அண்மியது. சண்முகன் தாள் சார்கின்றேன் என்றார். அடுத்து, ஸ்ரீ பாலசுப்ரமண்யம்! என்று வீரிட்டுக் கூவினார். குழைந்தார். பின்புறம் சாய்ந்தது சிரம். அதே கணத்தில் அவர் ஆன்மா. ஆண்டவன் திருவடி நிழலில் அமைதி யடைந்தது.

தெளிவு பெற்றிருக்கும் சம்வர்த்தனர், இது கண்டு திடுக்கிடவில்லை. பேறு அன்னைக்குப் பிறந்தது என்று, ஆறுதல் கொண்டது அவர் உள்ளம். நியதியுடன், தாய்க்குரிய கடனை நிறைவேற்றினர்.

அதன்பின் சம்வர்த்தனர், சிறந்த அன்பர்கள் பலர்க்குச் சிவதீட்சை செய்து வைத்தார். அருங்கலை நுட்பம் பலவும் அறிவித்தார். பேரறிவுடைய மாணவர்கள் பலர் பெருகினர்.

அரஹர முழக்கம், ஆறுமுகா! ஸ்ரீ பாலசுப்ரமண்யம்! என்ற ஆர்வ அழைப்பொலி, வரவர ஆண்டார் குப்பத்தில் வளர்ந்தது.

பயன் தருகின்ற பரணி; கேண்மை விளைவிக்கும் கிருத்திகை; வியன் மிகுவிக்கும் விசாகம்; வேட்கையை

நிறைவேற்றும் வெள்ளி தினம்; வாரம் தரும் சோமவாரம் முதலிய புண்ணிய காலங்களில், கந்த லோகமாகவே ஆண்டார் குப்பம் காட்சி யளித்தது.

பயனுன இந்நிலை பல காலம் நிகழ்ந்தது. செய்தனவே தவமாக்கும் அத்தன் திருவருளால், சம்வர்த்தனர் திருமேனி. ஒரு நாள் பொன்னுய் மின்னிப் பொலிந்தது. உள்ளிருந்த ஆன்ம ஒளி, உடலம் முழுதும் ஊடுருவியது. என்ன வியப்பு! இறுதியில் இலிங்க உருவம் எய்தியது.

விவரம் அறிந்த வித்தக பக்தர்கள், விரைந்து கூடினர். அவர் திருமேனிக்கு என்று ஒரு ஆலயம் சமைத்தனர். ஆசார்யத் திருமேனியை, அன்பு மிகுந்து ஆராதித்தனர். சம்வர்த்தன லிங்கம் என்ற திருநாமம் சூட்டி, ஏத்திப் போற்றி இறைஞ்சினர்.

அந்த இலிங்கம், இன்றும் ஆலயத்தில் இருக்கிறது. பரிவு தரும் இக் கோயிலில் உள்ள உயர்திரு காட்டாஹூர் சண்முக முதலியார் கட்டிய பதினுறு கால் மண்டபத்தின் ஈசாந்ய திசையில் இருக்கும் ஒரு கல் தூணிலும், இவர் திருவுருவச் சில்பம் இருக்கிறது.

## பால நதி மகிமை

ஆண்டார் குப்பத்தில் அமைந்த ஏரி, கால்வாய்கள், கிணறுகள், குளங்கள் அனைத்தும், கோயிலுக்குக் கிழக்கில் உள்ள தூய பால நதியின் தொடர்புடையன.

இந்நதியில் பரணி, கிருத்திகை, சஷ்டி, விசாகம் முதலிய புண்ணிய தினங்களில், வைகறையில் நீராடி அனுட்டித்தோர், பேறனைத்தும் பெறுவர்.

அமாவாசையில் இங்குத் தருப்பணம் இயற்றினுல், நரகர் ஆயினும் நற்கதி யடைவர்.

இங்கு மகேஸ்வர பூஜை செய்வது, மகத்தான புண்ணியம். நதியில் நீராடி, ஆலயத்தை வலம் வந்து வழி

படுவோர், பிறவி தீர்ந்து பேரின்பம் பெறுவர் என்று, சூத முனிவர் சௌனகாதியர்க்கு உள்ளம் உருக இவ் வரலாறுகளை ஓதினர்,

அவைகளைச் சிரவணித்த அம் முனிவர்கள், ஒருங்கு திரண்டனர். புறப்பட்டனர், ஆண்டார் குப்பத் தலத்தை அடைந்தனர். தல எல்லையில் வீழ்ந்து வணங்கினர். பால நதியில் மூழ்கி, ஸ்ரீபாலசுப்ரமண்யப் பெருமானைச் சேவித்துப் பரமானந்தம் எய்தினர்.

## கால மாறுதல்

இயற்கையின் திருவிளையாடல்கட்கு எல்லையே இல்லை. மக்களின் லோகாயத மனத்தாலும், மன்னர்கள் ஆட்சியின் மாறுபாட்டாலும், பல காலமாகப் பிரகாசித்த பதிகள் பல, இருக்கும் இடம் தெரியாமல் உருக் கரந்தது உண்டு.

கோரமான கர்மங்கள் கொக்கரிக்கும் போது, மெய்ப் பொருளை, அதை உணரும் மேலோரை, நுட்பமான அருள் நூற்களை, மக்களே போல்வர் மறப்பர். மனம் போன போக்கில் போவர். வாய் வந்தன பேசி வாழ்வர்.

இத்தகையவர்கள் அதிகரிக்கும் போது, கோயில்களின் மகிமை குன்றும். உண்மையாளர் பலரை, உதவாக் கரைகள் என்று, கீழ் நோக்கினர் ஒதுக்கி விடுவர். இவைகளால், அவர்களை, தொல்லை தரும் பாவங்கள் தொடரும்.

அதன் பயனாக, மாரிவளம் குறையும். மண்ணின் சத்து மறையும். விளைவில் சத்து விளங்காது. பேர் சொல்ல முடியாத நோய்கள் பெருகும். உறவினருள் பகையே உருவாகும். நயவஞ்சகமே நண்பருக்குள்ளும் நடமாடும். அமைதி அழியும், அல்லல் பெருகும். என்றும் உள்ள அனுபவங்கள் இவை

சம்வர்த்தனர், அவரது அன்னை, வானவர்கள், முனிவர்கள், சித்தர்கள் முதலினோர்க்குப் பல சித்தி தந்த ஆண்டார்

குப்ப அருள் தலம், மக்கள் மன நிலைக்குத் தக்கபடி, சில காலம் வரை கண்கட்கு மறைந்திருந்தது. எங்கும் செடிகள் எழுந்தன. இறைவன் ஆலயம், இருந்த இடமே தெரியவில்லை. நிலையிது பல காலம் நீடித்தது.

பல தொல்லைகள் பட்டுப் பட்டு, அதன் பின் அறிவில் தெளிவு அமைவது உண்டு. அதன்படி, மோதும் துன்பங்கட்கு மூல காரணம், மயிலேறும் பெருமானை மறந்திருப்பது தான் என்ற நினைவு சிலர்க்கு எழுந்தது.

இற்றைக்கு முந்நூறு ஆண்டுகட்கு முன், ஆண்டார் குப்பம் ஆவாரங் காடாக அடர்ந்து கிடந்தது. அப்பகுதியில் சென்று பசுக்கள் புல் மேய்வது வழக்கம்; மாலையில் வீடு திரும்பும் அவைகள், கணிசமான அளவு பழையபடி பால் கறப்பது இல்லை. அவைகட்கு உரிய ஆண்டிகள் எனப்பெறும் தேவர் வகுப்பினர், அதன் காரணம் அறியக் கருதினர்.

மறுநாள் மேய்ச்சல்கால் நிலத்தில், மறைந்திருந்து நோக்கினர். காட்டுள் ஒரு புதர்; அதன் நேராகச் சென்ற ஒரு பசு, புற்றுக்கு நேராக நின்று பாலைச் சொரிவதை பார்த்தனர். விரைந்து பசுவை விரட்டினர். புதரைச் சுற்றி யிருந்த காட்டை, சிறிது சிறிதாக அழிக்க லாயினர். விளைவாகிப் பெருகிய செடி கொடிகளை வீழ்த்தினர்.

என்ன அதிசயம்! ஒரு சரக்கொன்றை. அதன் அடியில் எழுந்தருளி யிருந்த ஸ்ரீபால சுப்ரமண்யர் திருவுருவம். முன்னைய புண்ணியத்தால், அவர்கள் கண்கட்கு முதல்வன் அகப்பட்டான்.

கண்ட கண்கள் களித்தன. வியந்தனர். வீழ்ந்து பணிந்தனர்.

பிரபோ! அருளார் பராபரா! மயிலேந்தும் துரையே! அயில் ஏந்தும் அரசே! மாபெரும் குற்றமுள மக்கள் கண்கட்கு, புதையல் எடுத்த தனம்போல், எளிய எங்கட்கும் புலனாயினையோ? வாழி இறைவா! வாழி நின்னருள் என்று வாழ்த்தினர்.

குதூகலங் கொண்டு தம் இனத்தைக் கூட்டினர். ஆலோசித்தனர். ஒரு முடிவுக்கு வந்தனர். இன்னவர் இன்னவர் இப்பணி செய்வது என்று வரையறை செய்தனர்.

தம்மால் இயலும் அளவு, குருபரனுக்கு ஒரு கோயில் எழுப்பினர். சங்கு முழக்கினர். சேம கலம் தட்டினர். அறிந்த அளவு ஆராதிக்கலாயினர். நலஞ் சிறந்த இவ் வழிபாடு, பலகாலம் நடந்தது.

குமிடிபூண்டியை அடுத்தது, நல்லப்ப நாயகன் பாளை யம். அது ஒரு சிறிய பாளையப்பட்டு. அங்கு ஒரு சிறிய மண் கோட்டை கட்டிக் கொண்டு, அப்பகுதியை அந்த மன் னன் அரசாண்டான். அந்தப் பாளையப்பட்டு, நீர் வளம் உடையது. நிலவளஞ் சிறந்தது. எப்போதும் தப்பாத முப்போகம் கொண்டது. செல்வம் கொழிந்த அந்த சிறிய சாம்ராஜ்யத்தை, ஒரு நவாபு அரசன் அபகரிக்க நினைத் தான். அதற்கென்றே பெரும்படை திரட்டினன். சேனுதி பதியுடன், அப்படைகளைக் கூட்டி அனுப்பினன். படை முன்னேறி வந்தது.

இடைவழியில் வானம், கருத்தது. பயங்கரமாக மின்னி இடித்தது.

பெரு மழை பெய்ததால், ஆண்டார் குப்பத்திற்குக் கிழக்கில் உள்ள சாயனுவரம் எனும் கிராமத்தில், படை வீரர்கள் கூடாரம் அடித்துத் தங்கினர்.

சில நேரம் கழிந்ததும், சங்குகள் முழங்கின. ஹர ஹர நாதம் அளவிறந்து எழுந்தது. அதைத் தொடர்ந்து, சிவ சங்கமர்கள் செல்கின்றனர்.

படைத் தலைவன் கண்டான். பார்த்த அவன் மனம் படபடத்தது.

இங்கு என்ன நிகழ்கிறது ? எங்கே போகிறுர்கள்? யார் இவர்கள்? என்று சேனுபதி எண்ணினன். அவர்களை அழைத்தான். யார் நீங்கள்? இம் மழையில் எங்குப் போகிறீர் கள் என்றுன்.

இனி மழை நின்றுவிடும். தென்றல் வீசுகிறது. எம் வழிபாட்டுச் செய்தி யிவை என்று ஆண்டிகள், அஞ்சி அறிவித்தனர்.

பயப்படாதீர்கள்! யான் வெற்றி பெற்றுத் திரும்புமாறு, உங்கள் கடவுளிடம் விண்ணப்பம் செய்யுங்கள். உங்கள் சங்கநாதம் போல் எங்கள் ஜய பேரிகை ஒலித்தால், அளவிலாப் பொருள்களை உங்கட்கு அளிக்கின்றேன் என்று, ஆர்வங் காட்டிப் படைத் தலைவன் அறிவித்தான். அதன் பின் அங்கிருந்து அகன்றான்.

போகமே பொருள். இந்த வாழ்வு இப்படியே இருக்கும் என்று நம்பி யிருந்த நல்லப்ப நாயகன், இஸ்லாமியர் எதிர்ப்பு வரும் என்று எதிர்பார்த்திலன். துருக்கர் படைக்கு வரையறை யில்லை. அவர்களைச் சமாளிக்க முடியாது என்று அறிந்தான். வரவர அச்சம் வளர்ந்தது.

சமாதானக் கொடியை உயர்த்தினன். இருபுறத்துச் சேனைத் தலைவர்கள் சந்தித்தனர். கும்மிடிபூண்டி நல்லப்ப நாயகன்பாளையம், இஸ்லாமிய அரசர்க்கே உரியதாயிற்று. நல்லப்ப நாயகரே, இஸ்லாமிய ஆணையின் கீழ் நல்லாட்சி நடத்துவது. அதற்கு ஈடாக, கப்பம் ஆண்டுதோறும் இவ்வளவு என்று கட்டுவது என்ற உடன்படிக்கை உருவாயிற்று.

அதன்பின் இஸ்லாமிய சேனையதிபன், பாளையப்பட்டில் இருந்த பல செல்வங்களைக் கொள்ளை கொண்டு, ஜய பேரொலி எழுப்பித் திரும்பினன்.

வரும் வழியில், பழைய சங்குகள் ஒலித்தன. ஹரஹர முழக்கங்கள் அதிர்ந்தன. இரவோ பகலோ யாமறியோம்; இன்பமோ துன்பமோ யாமுணரோம். யாம் உளம்; யாம் வழிபட நீயுளை; போதும் இந்தப் பேறு என்று இருக்கும் அப் பக்தர்களைச், சேனதிபதி அறிந்தான். அவன் மனம் நெகிழ்ந்தது. அவர்கள் அமலனை வழிபடும் இடத்தை அணுகினன்.

வெற்றியுடன் மீண்டேன். உங்கட்கு என்ன வேண்டும்? கேளுங்கள் என்றான்.

ஐயா! ஒவ்வொருவருக்கும் ஒரு சாண் வயிறு. சுவல்ப முயல்வில் அதை நிரப்புவம். எண்சாண் உடற்கு எவ்வளவு நிலம் வேண்டும்; எங்கட்கு இருப்பது போதும்.

ஆண்டவன் வழிபாட்டிற்கு அமையுமாறு, இப் பக்கத்து நிலத்தை அளியுங்கள் என்று, எல்லையிட்ட நிலங் களைக் காட்டி ஆண்டிகள் கேட்டனர். அங்ஙனே ஆக என்று, சேனையதிபன், அதை அப்பொழுதே அவர்களிடம் சாஸனம் செய்து அளித்தான்.

## அருந்தவப் பாம்பன் அடிகள்

பாண்டி நாட்டின் பழம்பதி இராமேச்சுரம்; அதைச் சார்ந்தது பாம்பன். உத்தம அத்தலத்தில் உதித்தவர், அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞான பாநு ஸ்ரீமத் குமரகுருதாச முநீந்திரர். இளம் பருவ முதல் இளம் பரிபூரணன்பால் அன்புடைய இவர், 6666 பாக்களால் வாக்குத் தொண்டை வளர்த்தவர். “ எந்தக் கடவுளும் எங்கோள் போழ் கந்தக் கடவுளை மிஞ்சாதே ” என்று, பரமன் திருவுருவை உள்ளத்திற் பதித்தவர். திருமேனிக்கு உரிய திருப்பணியாக, அளவிலாத் தலங்களைச் சேவித்து, வாழ்விக் கும் அன்பை வளர்த்தவர். பிரப்பன் வலசையில் தியானித் திருந்து, அரிய தகராலய ரகசியத்தை அறிந்தவர்.

அநுபூதி சித்தித்த இந்த அடிகளார், தருமமிகு சென்னையில் இறுதியில் தங்கினர். அக்காலத்தில் ஒரு சம யம், சிறந்த திருவொற்றி யூர்க்குச் சென்றார். பெருமானைச் சேவித்தார். பழவேற்காட்டிற் பரனைப் பணிந்தார். திருப் பாலை வனத்தில், திருவருள் இறையைத் தொழுதார்.

மாசி மாதம். தாங்க முடியாத குளிர். அதைச் சகித் தார். வைகறையிற் பொன்னேரிக்குச் சென்றார். தெற்கு நோக்கி நடந்தார். ஆண்டார் குப்பத்தை அணுகினார். பகல் மணி பன்னிரண்டு.

ஸ்ரீபாலசுப்ரமண்யர் திருக்கோயிலைக் கண்டார். கை கூப்பித் தொழுதார். திருக்கதவம் சாத்தி யிருந்தது. ஆல யத்தை வலம் வந்தார். ஒரு சத்திரத்துத் திண்ணை. அத னில் அமர்ந்தார். தியானத்தில் இருந்தார்.

மாலை அஸ்தமன நேரம். திருக்கோயில் திருக்கதவு அப்போதும் திறக்கவில்லை. என் செய்வது? என்று எண்ணி னுர். வருந்தியது மனம். திரும்பினுர்.

இவர் வந்து போதலை அறிந்த ஒரு அந்தண அம்மை, அர்ச்சகரது மைந்தரான ஒரு இளஞ்சிறுவரை அழைத்தார்.

அந்த ஸ்வாமிகளை அழைத்துச் செல்! சேவை செய்து வை என்றுர்.

அவ்வாறே சிறுவர் அழைத்துச் சென்றுர். இறைவனை ஆராதித்தார். அடிகளார் சேவித்தார். உள்ளம் நெகிழ்ந்து உருகினுர். திருநீற்றுப் பிரசாதம் கைக்கு வந்தது.

அதைப் பிரமக் குழவியே தருவதாகப் பாவித்து ஏற் றுர். புனித திருமேனியிற் பூசி மகிழ்ந்தார். வணங்கி எழுந்தார்.

அடியேனைக் காத்தருளும் கலைகண்ணே! கருணு நிதியே! என் கடவுளே! அடிமையின் தேக வியோகம், என்று நிகழும்? அது எங்கு நிகழும்? வருந்துகிறேனே என்று சிந்தித்தார்; வந்தித்தார். மீட்டும் வணங்கி எழுந்தார், சத்திரத்தை யடைந்தார்.

இரவு மணி ஏழரை. சத்திரக் கதவு தாளிட்டு இருந் தது கண்டார். தடைப்பட்டு நின்றுர். அவ்வமயம், வீதி வழியே சென்ற கிராமாதிகாரி, திரு. நாகரத்தின முதலியார் அவர்கள், கனிவு மிகுந்த அடிகளைக் கண்டார்.

நிற்பவர் யார்? என்றுர். அடிகள் பதிலுரைத்திலர். அதன் பின் விளக்கு ஒன்று கொணரச் செய்து, அவ்வொளி யில் அடிகளை நோக்கினுர். இருகரம் கூப்பி இறைஞ்சினுர்.

ஸ்வாமி! தாங்கள் யார்? பாம்பன் அடிகள் என்கிருர்களே! அது தாங்கள்தாஞ என்று விநயம் மிகுந்து வினவிஞர். புனித அடிகள் புன்னகை செய்தார். குறிப்பறிந்த அவர், அளவிலா மகிழ்ச்சி யடைந்து, அடிகளை வணங்கி எழுந்து அழைத்துச் சென்ருர். உத்தமமான பாலன்னத்தை உண்பித்தார். உரையாடி மகிழ்ந்தார். இந்த அனுபவங்களை,

" யாக்கை யேபனிப் பென்று சென்னை விட்(டு)
எறுழோ டேகிஒல் குறுமொர் கானிலுன்
நோக்கில் நாளிரண் டொன்று காறும்ஊண்
நுகர்வில் வெப்பும்ஏர் நிகழ்ஓர் குப்பமே
பார்க்க உற்றபோ(து) ஊண்இல் புன்கணும்
படிய வே,வனை கடவுளே! எனைக்
காக்க என்னெடும் போதரும் தனிக்
களைகணே! இந்நாள் உளைவது ஏதரோ. "

என்று, பாம்பனடிகள் ஆண்டார் குப்பத்து ஆண்டவனைப் பரிந்து நெகிழ்ந்து பாடி மகிழ்ந்தார். அவர்க்குச் சேவை அளித்து, பசிதீர அன்னம் அளித்த பரம கருணையை, பல காலம் அன்பர்க்குப் படித்துப் படித்துக் கூறினர் அடிகளார். அடியர்களை அரவணைக்கும் ஆண்டவன் அருட்கு அளவும் உளதோ?

## தெய்வத் திருப்பணி

கலியுகத்திற் கண்கண்ட தெய்வமான ஆண்டார் குப்பத்து ஆண்டவரான ஸ்ரீபால சுப்ரமண்யர் திருக்கோயில் திருப்பணிக்கென்றே பிறந்தவர்கள், அண்மையில் இருந்த இருக்கின்ற சில புனித சீலர்கள்.

அரசூர் திரு, பார்த்தசாரதி முதலியார் அவர்களது பெருமுயற்சியால், சந்நிதி முன் கம்பீரமான பதினுறுகால் மண்டபம் ஒன்று அமைந்தது.

அம்மண்டபத்தின் தெற்கில் கார்த்திகை மாதர்கள், சரவணப் பொய்கையில் இருக்கும் முருகனை, எமையாளும் பார்வதியார் எடுக்கின்ற செய்திகள். குமரனுக்கு சக்திவேல்

கொடுக்கும் அற்புதம், அருணகிரிக்கு உபதேசம். ஜோதி இராமலிங்கர் திருவுருவச் சிற்பங்கள் முதலியன, கண்ணையும் கருத்தையும் கவர்வனவாயுள.

அம்மண்டபத்தின் கீழ்ப்புறத்தில் அயனுக்கு அருளல்; உமையாள் மணாளற்கு உபதேசித்தல்; விசாகன் தேவியருடன் வீற்றிருக்கும் கோலம்; காவல் இடும்பன் கம்பீரத் தோற்றம் முதலிய சிற்பங்கள், அருமையிலும் அருமையாக அமைந்திருக்கின்றன.

திருமாலின் சேஷசயனம், இராமாவதாரம், அகலிகை சாப விமோசனம், திருஞான சம்பந்தர்க்கு அம்பிகை பால் அளித்தல், காம தகனம், கணபதி மாம்பழம் பெறுதல் முதலிய அருளாடல்கள், இப்போதுதான் நடப்பது போன்றுள அற்புத சிற்ப அருமைகளை, என்றும் மறக்க முடிவதில்லை.

மண்டபத்தில் ஸ்ரீ விசாலாட்சியம்மை, ஸ்ரீ ஆறுமுகப் பெருமான், ஸ்ரீ நடராஜர் சந்நிதிகளை இடைக் காலத்தில் கட்டி முடித்திருக்கிறார்கள்.

ஆலயத்தை வலம் வரும் போது, ஸ்ரீபாலசுப்ரமண்யர் சிகரத்தைப் பார்க்கிறோம். ஸ்ரீவள்ளிநாச்சியார் திருமண வரலாறுகளான வேடர் கோலம் கொள்ளல், வேங்கை மரமாதல், கிழவனான பெருமான், யானையின் மிரட்டல், வள்ளியார் அஞ்சல், ஆறுமுக தரிசனம், நாரதர் பரவசம் முதலிய சுதைச் சிற்பங்களின் அருமைகளைப் பார்த்துக் கொண்டு இருந்தாலே பசி ஆறும் போல் உளது. இதைக் கட்டி முடித்த பெருமகர், உயர்திரு காட்டாஹூர் சுப்ரமண்ய செட்டியார் அவர்கள்.

சிவமயம்.

வேலுமயிலுந் துணை.

# ஆண்டார்குப்பத் தலப் பாடல்கள்

## பிரசன்ன விநாயகர்

அரசன்னம் அழகுவணம் மிசையிவரும்
அரவிந்தன், அரவணைந்தான்
முரசன்ன பரவலினுக்(கு) அருள்பொழியும்
சிவபெருமான் முதற்பே ருகி,
வரசன்னம் வளர்கழனி நிறையாண்டார்
குப்பத்து வதியும் எங்கள்
பிரசன்ன விநாயகனுர் உயர்சரணை
உளத்திருத்திப் பேசு வாமால்.

## விசுவேசர்

சிசுவேத ஊக்கிரங்கிப் புரந்திடுவான்
தூணத்துச் சிங்க மாகி,
விசுவேயும் நிறவவுணன் உயிர்குடித்தான்
உறுவெறியை விலக்கிச், சீலப்
பசுவேறிப் பதுமைமுனம் வந்துகடைக்
கணித்தாண்ட பண்பு வாய்ந்த
விசுவேசன் திருவடியை யெஞ்ஞான்று
மேவிரும்பி விமலம் சார்வாம்.

## விசாலாட்சி யம்மை

திசாமுகத்து நனியுலவி விண்ணவரை
வெற்றிகொளும் திறத்த னுன
தசானனன்முன் விப்பிரனுப் போந்தவனைக்
குட்டிஅருள் தந்து காத்த
கசானனனல் சேயைத்தம் மடிமீதி
லேயிருத்திக் களித்து வாழும்
விசாலநேத் திரத்தாயின் விரைகழலை
நாளுளும் வேண்டி நிற்பாம்.

மதுர மாங்கீ ருக்கு மாமுக
  மதிகொள் பூங்கா விக்கு நேரெனும்
வடிகொள் கூர்ம்பார் வைக்கு மாடக மயில்போலே

வருவ தாஞ்சா யற்கும் வாரணி
  நகில மாஞ்சூ துக்கு மேனைய
வடிவின் வான்சீ ருக்கு மால்பெற நனிமாயா

மரபெ லாஞ்சா லச்செய் தோதக
  மிகுக லாந்தோய் வித்தை யால்வளர்
மதியெ லாம்பாழ் பட்டு மாமத வெறிநாய்போல்

தெருவெ லாஞ்சூ ழூற்ற ஞேரொடு
  புணர்வ தாங்கா மத்துண் மூழ்குபு
திரியு நோன்போ டிட்ட வேலைசெய் முறியாளாய்

திடமெ யாங்கா ரத்து வீரிய
  முழுது மாய்ந்தே மிக்க நோய்கொடு
செகமெ லாந்தூ ஷிக்க வீணினின் மடிவார்சேர்

திரளெ லாங்கோ டிக்கு நாயக
  மகுட மாம்பா விக்கு நீயருள்
சிறிது கூர்ந்தா டிக்க லாபமொ டெதிரேசூழ்

சிகியி லூர்ந்தே கிட்டி நீள்வினை
  யறவு மேம்பா டுற்றெ ஞேதொரு
சிரமுய் வான்ருள் வைக்கு நாளெது மொழிவாயே;

தருவு ளான்பூ சிக்கும் வேலொரு
  மயிலு நாம்பா டிப்ப ராவிடு
தவள மாங்கோ ழிப்ப தாகையு முடையோனே!

சகரர் தோண்டா ழூற்ற சாகர
  நடுவி னீண்டோர் கொக்கெ ஞவளர்
தகுவன் மாண்டே கக்கொல் வீறுறு செயவீரா!

தணிகை வேந்தே! வெட்சி கூதள
  மருவு பூந்தார் துற்ற தோணிரை
சயில சேந்தா நற்ற போதனர் பெறுபேறே!

சமணர் மூண்டே தர்க்க மாடிட
அணையர் கூண்டோ டற்று மாய்வகை
தமிழ்மு ஞன்ருேர் மெச்ச வோதிய குருநாதா!

அருவ நான்கா மொற்றை யாமரு
உருவ நான்கா மிக்க ரூபமும்
அணவி யாண்டே அர்ச்ச ஞவடி வெனவாழ்வாய்

அமுது தீம்பா கொத்த தாகிய
கவிகள் வேய்ந்தே பத்தி யாலணி
அடியர் பாங்கே பட்ச நீடிய அருளாளா!

அரனெ மான்சோ தித்த ஏல்வையின்
மறையி ஞேங்கா ரத்தி ஞேர்பொருள்
அறிகு வேம்போ திப்பல் கேளென மொழிவாயா!

அடல்செய் காண்டீ பற்கு நேர்பவர்
அளவில் சான்ருேர் உற்ற பேரவை
அணிகொ ளாண்டார் குப்ப மேவிய பெருமாளே!

## ஸ்ரீ பாலசுப்பிரமணியர் திருப்பதிகம்.

(மணவழகர்.)

கும்பமுனி சூழாண்டார் குப்பத்திற் கோயில்கொண்டு
வெம்பவநோய் தீர்க்கும் விசாகவேள்—செம்பதுமப்
பாதங்கள் நாடிப் பகருந் தமிழ்ப்பதிகம்
மாதங்க மாமுகனேர் வான்.

---

பூமகிழ் தருமில் வாழ்க்கையிற் பிணிதீர்
பேர்கமும் மாகலோ கத்துக்
காமகிழ் பணப்பாய் பூவணை மருவும்
கவினுமெய் யடியவர்க் கருளும்
சேமகிழ் ஆன்ம நாதனுர் நுதற்கண்
செல்வமே! ஆண்டவர் குப்பத்
தேமகிழ் பால சுப்பிர மணியத்
தெய்வமே உய்யுமா றருளே. (1)

கற்பக நாட்டுத் தெய்வகுஞ் சரியும்
கானவர் கொடியுமே மருவும்
பொற்புயா சலமீ ராறுடை யவனே !
புண்ணியர் உண்ணுமா ரமுதே !
தற்பரா நந்தர் ஆன்மநா யகனுர்
தநயனே ! ஆண்டவர் குப்பச்
சிற்பரா ! பால சுப்பிர மணியத்
தெய்வமே உய்யுமா றருளே. (2)

பல்விசா ரஞ்செய் தெமைமிக வருத்தும்
பவப்பிணி யறக்களைந் தொழித்து
நல்விசா ரஞ்செய் சுகாதரம் தருதி
நாயகா எனிலருள் வழங்கும்
சொல்விழை ஆன்ம நாதனுர் நுதற்கண்
தோன்றலே ! ஆண்டவர் குப்பச்
செல்வமே ! பால சுப்பிர மணியத்
தெய்வமே உய்யுமா றருளே. (3)

ஏரகம் பழனி சீரலை வாய்நல்
எழிலுரு மாமலை யிலஞ்சி
பாரகம் பரவு தணிகையா தியபற்
பலமலை தொறுநடம் புரிவாய்
தாரக மாகும் ஆன்மநா யகர்நேர்
சாமியே ! ஆண்டவர் குப்பச்
சீரகப் பால சுப்பிர மணியத்
தெய்வமே ! உய்யுமா றருளே. (4)

கீரனே தாற்றுப் படைத்தமிழ் செவியிற்
கேட்டலுங் கிரிக்கனுர் குறளைச்
சூரற மாய்த்தாண் டாயிரத் தொகையாந்
தொண்டரைப் புரந்தவேல் முருகா !
காரணர் ஆன்ம நாதனுர் குளக்கட்
காதலா ! ஆண்டவர் குப்பச்
சீரருட் பால சுப்பிர மணியத்
தெய்வமே ! உய்யுமா றருளே. (5)



ராஜ கோபுரம்
(சந்திதி தோற்றம்)



பால நதி தீரம்.



மூலவர் விமானமும்,
ராஜ கோபுரமும்



சோபான மண்டபம்
(தென்புறத் தோற்றம்)

கோதிலா மனத்திற் குறைநிதி யாகும்
குமரனே ! அமரர்சே னைக்கு
நாதனே ! மதுரைச் சங்கநா வலர்சூழ்
நற்றவச் செல்வமா மதியே !
காதல்கூர் ஆன்ம நாயகர் மதலாய் !
கவின்கொளாண் டார்குப்ப மருவும்
தீதறு பால சுப்பிர மணியத்
தெய்வமே ! உய்யுமா றருளே. (6)

உள்ளவா றுன்னை யுபாசிக்குந் தொழும்பர்க்
குள்ளநோய் களைந்து நற்சுகமே
கொள்ளைகொண் டிடத்தந் தனையர்நெஞ் சகத்திற்
குலவிய புலவர்நா யகனே !
வள்ளலா ரான்ம நாதர்கண் மணியே !
வளங்கொளாண் டார்குப்ப மருவுந்
தெள்ளுநீர்ப் பால சுப்பிர மணியத்
தெய்வமே ! உய்யுமா றருளே. (7)

மற்றொரு புகலிங் கறிகிலேன் நாயின்
மதிமிக மயங்கினேன் தீர்தல்
எற்றையோ எனவும் ஐயுறு கின்றேன்
இரங்கிறங் கிறங்கெனச் சூழ்ந்தேன்
பற்றுவார்க் கருளும் ஆன்மநா யகனார்
பரவுசேய் ஆண்டவர் குப்பச்
சிற்றிளம் பால சுப்பிரமணியத்
தெய்வமே! உய்யுமா றருளே. (8)

கந்தனே ! அறுமீன் காதலா ! வாசக்
கடம்பனே ! கதிர்வடி வேலா !
சொந்தமென் றுன்றன் திருவடி நினையும்
தூயவர் வாழ்வுற அருளும்
செந்திலா திபனே ! சரவண பவனே !
சிந்தையில் இருந்தளம் சிவனே !
தந்தையே ! ஆண்டார் குப்பமென் றோதும்
தலத்தவா ! உய்யுமா றருளே ! (9)

பத்திசெய் தறியேன் பசுந்தமிழ் நடையிற்
பாவலோ ராவல்கூர் தரவே
துத்தியம் பகர்வேன் சொற்சுத்தி யறியேன்
துதியுமேற் றருள்கெனச் சூழ்ந்தேன்
சத்திசேர் ஆன்ம நாதர்கண் மணியே!
சண்முகா! ஆண்டவர் குப்பச்
சித்துருப் பால சுப்பிர மணியத்
தெய்வமே! உய்யுமா றருளே. (10)

## வேல்குழவி வேட்கை.

### (ஸ்ரீமத் பாம்பன் அடிகள்.)

பதினேழ் ஒன்றும்விழை செய்ய பாதம் ஒலிட,நல்
மதிபோல் மாமைமுக மண்ட லம்ப குக்கநகும்
கதியே வேல்குழவீ! நின்னைக் காத லால்தழுவ
நிதியே! வாராயோ? கைகள் நீளு கின்றனவே.

(பதினே ழொன்றும்—பதினெண்கணமும். விழை-விரும்பும். ஒலிட—ஒலிக்க. மாமை—அழகு. நகும்—ஒளி வீசும்.) 1

சீவி முடித்தசிகை, செம்பொன் சுட்டி, நன்குழைகள்
மேவும் உறுப்புநிழல் செய்ய ஆடும் வேல்குழவீ!
ஏவல் கொடுத்தருள எண்ணி என்முன் வாராயோ?
கூவை வெறுத்தகண்கள் இச்சை கொள்ளு கின்றனவே.

(ஏவல்-திருப்பணி. கூவை—உலகத்தை.) 2

பாவே றும்சவையர் மெச்சிப் பாடும் வேல்குழவீ!
சேவே றுன்பவளத் தெய்வ வாயை யேதிறந்து
தூவே றின்கரைகள் இங்குச் சொல்ல வாராயோ?
கோவே! என்செவிகள் இச்சை கொள்ளு கின்றனவே.

(பா—பாட்டு. சவையர்—சபையில் இருப்பவர்கள். சேவேறு—சிவப்புமிக்க. தூ—தூய்மை. கரைகள்—மொழிகள். 3

பொன்னூர் கண்டசரம் நன்கு பூண்ட தங்கவொளிக்
கொன்னூர் வேல்குழவீ! நல்ல கொவ்வை நின்இதழை
என்ஆர் வம்தீர இங்கு நல்க வாராயோ?
உன்னூர் உள்நிலையும் வாயும் ஊறு கின்றனவே.

(உன்ஆர்-தியானிக்க உள்ள.) 4

எண்ணே(று) உம்பல்அயில் என்ற வேல்பி டித்தசையும்
கண்ணே ! செங்குழவீ ! என்றன் கண்கள் நாடழகே!
தண்ணே றும்வதன முத்தம் தாரா யோ?பிறிது
நண்ணு என்உளந்தான் நின்னை நாடு கின்றதரோ.

(உம்பல் அயில்—ஆண்மை வேல்.) 5

முத்தே ! மாமணியே ! முல்லை வெட்சி நல்கடம்பு
வைத்(து)ஆ ரம்புனை ந்(து,)என் முன்னர் வாராயோ?உழலும்
சித்தார் வேல்குழவீ ! உச்சி செவ்வன் மோந்துகொள்ள
வித்தே ! என்மூக்கின் இச்சை மீறு கின்றதரோ.

(ஆரம்—மாலை.) 6

ஐயார் நல்அரையில் பொன்வ டங்கள் ஆடஉழல்
வையார் வேல்குழவீ ! இங்கு வாரா யோ?கால்கள்
மையார் கண்மலர்கள் இன்பு மல்க மோந்துகொள்ள
மெய்யாய், என்மூக்கின் இச்சை மீறு கின்றதரோ.

(ஐ—அழகு. உழல்—பவனி வரும். வை—கூர்மை.) 7

பொன்போல் மேனியிலே நல்ல பூம ணம்கமழும்
இன்பே ! வேல்குழவீ ! இங்கு வாராயோ? விரியா
அன்பார் புன்முறுவல் செய்யும் ஆர்வில் பல்லழ(கு,)என்
துன்பீர் அம்பெனவே நெஞ்சம் துள்ளு கின்றதரோ. 8

கள்ளார் செங்கரும்பே ! கண்டு, தேனே ! இன்அமுதுண்
கிள்ளாய் ! வேல்குழவீ ! அன்பர் கேளே ! மாதுமையாள்
பிள்ளாய் ! கண்ணிஒன்று நல்ல பெட்பின் நான்தருவேன்;
தள்ளா தேகொளற்(கு,) என்முன் வாரா யோதகையே.

(கண்ணி—மாலை. பெட்பு—அழகு.) 9

மாண்பார் சந்தமுனி இன்ப வாழ்வே ! நின்எழிலைக்
காண்பார் வேறழகும் இங்குக் காண்பார் கொல்லோ?நான்
ஊண்பா(டு) அஞ்சியுனை நன்கு காண்பான் இன்றுவந்தேன்
வீண்போ காதபடி, இங்ஙன் வாராய் வேல்குழவீ !

(சந்தமுனி—அருணகிரி நாதர்.)

---

# ஸ்ரீ பால சுப்பிரமணியர் பதிகம்.

(அருட்கவி அருணாசல அரனடிகள்.)

உலகெலாந் தொழுகின்ற உமைபாகன் விழியிலனல்
ஓங்கவே அதிலிருந்து
உற்பத்தி யாகவும் சரவணப் பொய்கையில்
ஒளிர்கின்ற ஆறுமுகமாய்
இலகுபனி ரெண்டுபுயம் ஈராறு கைகளும்
இசைந்ததிரு மேனிஅழகும்
எண்ணரிய தேவாதி தேவர்கள் போற்றவும்
இருநிலந் துதிசெய்யவும்
மலரகித ஞனஅயன் மாலுடன் முனிரிஷிகள்
மனுக்களும் சூழ்ந்துநிற்க
வானின்று விண்ணவர்கள் மலர்மாரி சொரியவும்
வந்தவத ரித்தகுமரா!
பலவளம் பொழிகின்ற பாலநதி வளர்கின்ற
பதியில் ஆண்டார் குப்பம்வாழ்
பரமனின் மைந்தனே! வரமருள் முருகனே!
பாலசுப் பிரமணியனே. (1)

அரன்அரி தேவர்கள் அழைத்தகார்த் திகைமாதர்
அறுவரும் பால்கொடுக்க
அணுகுமுன் அவரவர்கள் ஏந்துங் குழந்தையாய்
ஆறுதிரு வுருவெடுத்தாய்
கரங்களி லிருந்துபால் உண்டபின் அங்குள
கடம்பமர நீழல்தன்னில்
கருதரிய திருநடன மாடினாய் கண்கொண்ட
காட்சியுந் தந்தருளினாய்
தரணியில் உனதுதிரு விளையாடல் காணவே
சத்திபார் வதியும்வந்து
தனதுகை யால்தழுவ ஏகவுரு ஆயினாய்
சாற்றிடக் கந்தனெனவே
பரகதி யளித்திடும் பாலநதி வளர்கின்ற
பதியில் ஆண்டார் குப்பம்வாழ்
பரமனின் மைந்தனே! வரமருள் முருகனே!
பாலசுப் பிரமணியனே. (2)

அன்னையும் உந்தனை அரனிடஞ் சேர்ப்பிக்க
அவர்தழுவி மார்பணைத்து
அருமையுட னேதனது உமைநடு அமர்த்தினுர்
அமரருந் தொழுதேத்தினுர்
உன்னதஞ் சேர்கந்த பருவதந் தன்னிலே
ஓடிவிளை யாடிநின்ருய்
உற்றநவ வீரர்கள் பலகோடி யாகவும்
உனதேவல் செய்துவரவும்
இன்னிசைப் பிரியராம் நாரதர் வேள்வியில்
எழுந்தசெந் நிறஆட்டையும்
இணையிலா ஜெயவீர வாகுவால் பிடித்துவர
ஏற்றவா கனமாக்கினுய்
பன்னல்மிக வோங்கிடப் பாலநதி வளர்கின்ற
பதியில் ஆண்டார் குப்பம்வாழ்
பரமனின் மைந்தனே ! வரமருள் முருகனே !
பாலசுப் பிரமணியனே. (3)

இந்திரன் பிரமனும் தேவர்கள் யாவரும்
ஈசனைக் காணவந்தார்
எதிருள்ள மண்டபந் தன்னில்சிம் மாசனம்
ஏறியே வீற்றிருந்தாய்
உந்தனை மதியாது உட்சென்ற வேதனை
உசாவினுய் அருகில்வரவும்
ஓம்என்ற பிரணவப் பொருளுண்மை சொல்லென
ஒன்றுமறி யாதுநின்ருன்
கந்தமா பருவதம் தன்னிலே சிறைவைத்து
கனசிருஷ்டி செய்துவந்தாய்
கயிலைவாழ் சிவனுக்குக் காதில்உப தேசித்து
கமலஹூர் தியைவிடுத்தாய்
பந்தபா சந்தவிர் பாலநதி வளர்கின்ற
பதியில் ஆண்டார் குப்பம்வாழ்
பரமனின் மைந்தனே ! வரமருள் முருகனே !
பாலசுப் பிரமணியனே. (4)

அன்னைதந் தையர்களைத் துதிசெய்து கயிலையில்
அவர்களுடன் வீற்றிருந்தாய்
அரிஅயன் தேவர்கள் அளவற்ற பேர்களும்
அரன் திரு வடிபணிந்து
இன்னல்கள் செய்கின்ற பகைவர்கள் கொடுமையை
இனிசகித் திலமென்னவே
ஈசனும் உந்தனது எழில்முகம் நோக்கியே
இயம்பினுர் சென்றுவரவே
பொன்திகழ் கரங்களில் ஏகாதச ருத்திரர்
பொருந்தவும் வேல்பிடித்து
போற்றரிய வீரர்கள் பலகோடி சூழவும்
போர்க்கோலங் கொண்டெழுந்தாய்
பன்னல்மிக வோங்கிடப் பாலநதி வளர்கின்ற
பதியில் ஆண்டார் குப்பம்வாழ்
பரமனின் மைந்தனே! வரமருள் முருகனே!
பாலசுப் பிரமணியனே. (5)

இலகுபுகழ் பூதகணம் ஈராயிர வெள்ளமும்
இலட்சத்தொன் பதுவீரரும்
எண்ணரிய சேனைபடை தளகர்த்தர் சூழவும்
ஏறினுய் தேரதனிலே
கலகலென மணியோசை குடமுரசு பேரிகை
கனத்தவாத் தியமுழங்க
கத்திகே யூரமும் யுத்தாயு தங்களும்
காலாட்கள் கொண்டுவரவும்
வலனுயர வென்றவொலி வானதிர ஓங்கவும்
வையமே கிடுகிடெனவும்
வாயுபக வான்ரதம் ஓட்டவும் கிரவுஞ்சம்
வந்தடுத் தாய்விரைவினில்
பலகனிகள் மரமுயர பாலநதி வளர்கின்ற
பதியில் ஆண்டார் குப்பம்வாழ்
பரமனின் மைந்தனே! வரமருள் முருகனே!
பாலசுப் பிரமணியனே. (6)

நாரதர் இதுநமது பகைவர்களின் ஊரென
நவிலவும் ஆக்ரமித்து
நான்குபக் கஞ்சேனே சூழவும் அனுப்பியே
நகர்காவல் புரியுமென்ருய்
தாரகன் தனதுபடை யுடன்வந்து போர்செய
சைனியமெ லாம்இழந்தான்
சமீபத்தி லுள்ளகிர வுஞ்சகிரி யாயினுன்
சத்திவே லால்பிளந்தாய்
ஆரவா ரத்துடன் அதினின்று வெளிவந்த
அசுரர்குல மெலாமொழித்தாய்
அமரர்கள் போற்றவும் தேவகிரி தன்னிலே
அழகுபெற வீற்றிருந்தாய்
பாரதனில் பேர்பெற்ற பாலநதி வளர்கின்ற
பதியில் ஆண்டார் குப்பம்வாழ்
பரமனின் மைந்தனே ! வரமருள் முருகனே !
பாலசுப் பிரமணியனே. (7)

தேவகிரி விட்டுசிவத் தலங்களெல் லாஞ்சுற்றி
செந்திநகர் வந்தமர்ந்தாய்
தேவர்கள் உனதுதிரு வடிமலரைப் பூசிக்கத்
திருநடன மாடிநின்ருய்
பாவதொழி லேதனது பூடணம தாக்கொண்டு
பயங்கரப் படுத்தி யுலகைப்
பாழ்படும் படிசெய்த சூரபத் மன்றனுடல்
பதைக்கஇரு துண்டமாக்கி
சேவலின் கொடியுடன் மயில்மீதி லேறியே
சேவைதந் தருள்புரிந்தாய்
தேவர்கள் மகிழவும் ஜெகமெலாம் போற்றவும்
ஜெயபேரி கொண்டுநின்ருய்
பாவவினை போக்கிடும் பாலநதி வளர்கின்ற
பதியில் ஆண்டார் குப்பம்வாழ்
பரமனின் மைந்தனே ! வரமருள் முருகனே !
பாலசுப் பிரமணியனே. (8)

உலகினில் அசுரர்களை யாவையு மொழித்தபின்
உம்பர்சே னுதிபதியாய்
உற்றமுடி சூடிதெய் வானையைத் திருமணம்,
உளமகிழ வேமுடித்தாய்
வலனுயர் திணைப்புனங் காத்துகிளி யோட்டிய
வள்ளியை மணம்புரிந்தாய்
வையகந் தனிலுனை வந்தடுத் தோர்களின்
வல்வினை தனைக்களைந்தாய்
பலபேர்கள் நோயெலாம் பணியுமுன் நீக்கினுய்
பதமலர் தந்தருளினுய்
பாரில் பரிசுத்தனுய் நேரில்நின் றுனதுபுகழ்
பாடவும் அருள்புரிந்தாய்
பலவளம் பொழிகின்ற பாலநதி வளர்கின்ற
பதியில்ஆண் டார்குப்பம்வாழ்
பரமனின் மைந்தனே ! வரமருள் முருகனே !
பாலசுப் பிரமணியனே. (9)

ஆனந்த மாகவே ஆறுபடை வீட்டினுள்
அமர்ந்துதிரு வருள்புரிந்தாய்
அவனியோர் தங்களுக் குற்றதுயர் நீக்கினுய்
அமரர்கட் குதவிசெய்தாய்
வானலோ கத்திலும் பூலோக மதனிலும்
வரமெலாம் வழங்கிவந்தாய்
வள்ளிதெய் வானைகள் இருபுறம் வளரவும்
மயில்மீதி லேறிநின்ருய்
ஞானமும் யோகமும் நற்றவ சித்தியும்
நாதாந்த மோனநிலையும்
நாளுமுன் திருவுருவை நான்கண்டு போற்றவும்
நல்கினுய் காட்சியதனை
பானல்மிக வோங்கிடப் பாலநதி வளர்கின்ற
பதியில்ஆண் டார்குப்பம்வாழ்
பரமனின் மைந்தனே ! வரமருள் முருகனே !
பாலசுப் பிரமணியனே. (10)

## இப்பதிகம் ஓதுவார் அடையும் பயன்

அங்கண்மா நிலமதில் எங்குஞ் செழிக்குமென
அறைகின்ற விகிர்தி யாண்டில்

அரனரின் விரதமதை அனுஷ்டிக்கும் மாசியில்
ஆன இரு பத்தொன்பதில்

மங்கள வாரமும் சஷ்டி திதி கார்த்திகை
வளர்சித்தி யோகமதனில்

வடிவேல னருளினல் வரைந்தஇப் பதிகமதை
வாசித்த பேர்களெல்லாம்

அங்குள்ள வளநகர் ஆண்டார்குப் பத்தினில்
அமர்பால சுப்ரமண்யர்

ஆலயஞ் சென்றிதனை அநுதினம் ஓதுவோர்
அஷ்டசித் துகளோங்கவும்

மங்களகல் யாணகுண சம்பன்ன ராகவும்
மனைவிமக்கள் தழையவும்

மாநிதி படைத்துசுக ஜீவியாய் நீண்டநாள்
மாநிலந் தனில்வாழ்வரே. (11)

---

திகழாண்டார் குப்பம் திருநகரில் மேவும்
தகவுடைய கந்தன் சரணம்—புகழ்வோர்கள்
எல்லா நலன்களும் எய்தி இறையருளால்
பல்லாண்டு வாழ்க, பரிந்து.

— கிருபானந்தவாரி.
25–5–'59.

## உபய விவரம்

1. பிரதி சுக்லபட்ச ஷஷ்டி : சென்னை 3, அம்மன் கோயில் வீதி, க ரு ங் க ா ல். ஸ்ரீமதி ஸ்வர்ணாம்பாள். உச்சிக் கால அபிஷேகம்.

2. பிரதி பிரதோஷம் : சென்னை 3, அம்மன் கோயில் தெரு, நெ. 11, ஸ்ரீ கு. செ. ஆறுமுக செட்டியார்.

3. சித்திரை : (1) பௌர்ணமி அபிஷேகம் உற்சவம் : சுண்ணாம்புக்குளம் ஸ்ரீ S. R. ஷண்முகம் செட்டியார்; ஸ்ரீ சூ. ஆ. ர. மா. வேணுகோபால் செட்டியார்.

2. வைகாசி : (1) விசாகம் ஷண்முகர் அபிஷேகம் உற்சவம் : சென்னை 1, ஆச்சாரப்பன் தெரு, நெ. 53, ஸ்ரீ T. M. போகீஸ்வர முதலியார்.

,, (2) கிருத்திகை சங்காபிஷேகம்: உற்சவம் ஸ்ரீ A.K. முத்து குமாரஸ்வாமி செட்டியார். சென்னை.

3. ஆனி : பரணி : சென்னை பெரியமெட்டு, ஸ்ரீ R. K. ஜனார்த்தன நாயுடு அபிஷேகம், சந்தனக் காப்பு, இசைக் கச்சேரி, விசேஷ மேளம்.

,, கிருத்திகை : அபிஷேகம், உற்சவம்; காட்டூர் ஸ்ரீ K. E. இரத்தின சபாபதி முதலியார்.

4. ஆடி : (1) கிருத்திகை: அபிஷேகம், உற்சவம்; இளஞ்சியம்மாள், தொட்டிக்கலை சிங்காரவேலு முதலியார் பாரியாள், திருவள்ளூர் சக்தி பிரஸ் உரிமையாளர்.

,, (2) பூரம் : சுண்ணாம்புகுளம் S. K. G. கண்ணப்ப செட்டியார்.

5. ஆவணி : கிருத்திகை: அபிஷேகம், உற்சவம்; ஆரணி ஸ்ரீ A. S. டில்லி செட்டியார் & குப்புசாமி செட்டியார்

,, (2) விநாயக சதுர்த்தி : ஸ்ரீ கு. செ. ஆறுமுக செட்டியார் அபிஷேகம்.

விநாயகர் உற்சவம் பெரவள்ளூர், ஸ்ரீ சுப்ரமண்ய முதலியார்.

6. புரட்டாசி : (1) கிருத்திகை, அபிஷேகம், உற்சவம்; காட்டுப்பள்ளி, ஸ்ரீ நரசிங்க முதலியார் டிரஸ்ட், மைலாப்பூர், சென்னை.

,, (2) நவராத்திரி (9 நாளும்) சிறுகடல், ஸ்ரீ அ. கு. முனுசாமி செட்டியார்.

7. ஐப்பசி : (1) ஸ்கந்த சஷ்டி (முழுதும்) சென்னை, 3, அம்மன் கோயில் தெரு, நெ. 11, ஸ்ரீ கு. செ. ஆறுமுக செட்டியார்.

,, (2) ஸ்கந்த சஷ்டி; காலை சந்தி அபிஷேகம்: அரசூர் ஸ்ரீ அ. நா. நடேச முதலியார்,

,, (3) கிருத்திகை அபிஷேகம், உற்சவம்; ஸ்ரீ கேசவய்யர், கிருஷ்ண விலாஸ், பொன்னேரி.

,, (4) அன்னுபிஷேகம் தேவஸ்தானம்.

8. கார்த்திகை : (1) கிருத்திகை தீப விழா : பொன்னேரி, ஸ்ரீ. சா. கண்ணப்ப முதலியார்.

,, (2) ஒவ்வொரு சோமவாரமும் ஸ்ரீ. கு. செ. ஆறுமுகம் செட்டியார், லோக மன்னர் செட்டியார், செஞ்சு தேவர், மதுரை முதலியார், சுப்ரமண்ய முதலியார்.

9. மார்கழி : (1) தனுர் மாதம் (முழுவதும்) சென்னை திரு. கு. செங்கல்வராய செட்டியார் வகையரு.

,, (2) ஆருத்ரா அபிஷேகம், உற்சவம்: பெரவள்ளூர், திரு. சம்பந்த முதலியார் செங்கல்வராய முதலியார்.

,, (3) கிருத்திகை அபிஷேகம், உற்சவம் : பெரிய கரும்பூர், திரு. செஞ்சுராமப் பிள்ளை வகையரு கட்டளை.

10. தை : (1) பரணி. சந்தனக் காப்பு, சென்னை, சூளை, திரு. பக்தவச்சலு நாயுடு.

,, (2) கிருத்திகை அபிஷேகம், உற்சவம் : பொன்னேரி பாரத் லஞ்ச் ஹோம் திரு: ராமகிருஷ்ண வர்மா.

,, (3) சங்கிராந்தி – அபிஷேகம் : பொன்னேரி திரு. தா. குப்புசாமி செட்டியார்.

,, (4) பூசம் – சிறுகடல், திரு. அ. கு. முனிசாமி செட்டியார்.

11. மாசி : (1) கிருத்திகைஅபிஷேகம், உற்சவம்: சென்னை 3, அம்மன் கோயில் தெரு, நெ. 11, திரு: கு. செ. ஆறுமுகம் செட்டியார்.

,, (2) சிவராத்திரி : சென்னை, 3, சுப்பு செட்டித் தெரு, திரு. V. R. வேணுகோபால் செட்டியார்.

,, (3) மகம் : அபிஷேகம், உற்சவம் : நெடுவரம் பாக்கம் திரு. சண்முக பண்டிதர் வகையரு.

12. பங்குனி : (1) கிருத்திகை: அபிஷேகம், உற்சவம்: திருப்பதி S. P. ராஜு,

,, (2) உத்தரம் : அபிஷேகம், உற்சவம் : திரு. சீனிவாசலு நாயுடு, பஞ்செட்டி.

அதிகப்படி கிருத்திகை அபிஷேகம் உற்சவம் : ஸ்ரீ T. M. முத்து சரவண முதலியார், தத்தமிஞ்சி கிராமம், பொன்னேரி தாலூகா.

பிரதி ஆங்கில வருஷம் ஜனவரி முதல் தேதி, சென்னை பர்மா ஷெல் சிப்பந்திகள், அபிஷேகம், உற்சவம், மகேஸ்வர பூஜை.

,, டிசம்பர் 31 ஆ ர ணி சக்ரவர்த்தி செட்டியார், அபிஷேகம், சிற்றுண்டி.

,, பொன்னேரி ஸ்ரீராமலு செட்டியார் சன்ஸ் பழைய வண்ணாரப்பேட்டை அவர்களும் சிற்றுண்டிவழங்குகிறார்கள்.

## பிரதி சித்திரை மாத பிரம்ம உற்சவம்.

இரவு:—விநாயகர், வீரவாகு உற்சவம் :

திரு : அருணாசல குருக்கள் வகையரா, காட்டாவூர் கிராமம்.

1. காலை:—துவஜாரோஹணம் : திரு: கு. த. சம்பந்த செட்டியார், மளிகை வியாபாரம், 72–73, ராசப்ப செட்டித் தெரு, சென்னை.

யாககாலை கைங்கர்யம் : திரு: K. எல்லப்ப ரெட்டியார், கோணங்கிமேடு பம்மதுகுளம்.

இரவு:—அபிஷேகம், உற்சவம்: திரு: G. சுப்பிரமணிய நாயுடு, நரசிங்கமேடு, ஆமூர் மதுரா, பொன்னேரி.

2. காலை:—சவுடால்
இரவு:—தொட்டி
} திரு: A. S. மாணிக்கம் & கம்பெனி வர்ண வியாபாரம், 46, வெங்கடாசல முதலி தெரு, பி. டி. சென்னை.

3. காலை:—சவுடால்
இரவு:—தொட்டி
} திரு: C. வீரபத்திரன், ஆண்டார் குப்பம், சுரோத்திரியம்.

4. காலை:—சவுடால்
இரவு:-நாக வாகனம்
} திரு: அ. பெ. சுப்பராய பிள்ளை வகையரா.

5. காலை:—பச்சைமயில் சேவை
இரவு:—தங்கமயில் வாகன சேவை
தேவசேனை திருமணம்
} ரெட்ஹில்ஸ் வட்டார நெல் அரவை இயந்திர உரிமையாளர் சங்கத்தார்கள், நார்வாரிகுப்பம்.

6. காலை:—சவுடால்
இரவு:—தங்க விசித்திர யானை வாகனம்
} சென்னை ஸ்ரீகந்தசாமி கோவில் பழைய பித்தளை சாமான் வியாபாரிகள்

7. காலை:—சவுடால்
இரவு:—ரதமண்டபடி உற்சவம்
} சென்னை ஸ்ரீ கந்தசாமி கோவில் இரும்பு படிக்கடை வியாபாரிகள்.

8. காலை:—சவுடால்
இரவு:—குதிரை வாகனம்
பெரவள்ளூர் கிராமத்திற்கு எழுந்தருளல்
} பெரவள்ளூர் கிராமத்தார்கள்.

9. காலை:—சவுடால்
இரவு:—தொட்டி
} திரு: R. பொன்னுசாமி கிராமணியார், புழல்.

இரவு:—வள்ளியம்மை திருமணம், ஆண்டார்குப்பத்திற்கு எழுந்தருளல், ஆண்டார்குப்ப கிராமத்தார்கள்.

10. காலை:—தொட்டி-தீர்த்தவாரி
இரவு:—அவரோகணம் உற்சவம்
} திரு: த. லோகநாத செட்டியார் பிரதர்ஸ், Esso Agent, T. L. C. லாரி சர்வீஸ், 25, பொம்மு செட்டி தெரு, சென்னை-3.

11. இரவு:—தவன உற்சவம்: திரு: K. R. தணிகாசல செட்டியார் பிரதர்ஸ், சென்னை.

12. காலை:—உற்சவ சாந்தி அபிஷேகம் } திரு: கு. செ. ஆறு
இரவு:—ஆஸ்தான உற்சவம் } முக செட்டியார்,
கிளிஞ்சல் வியாபாரம், சென்னை–3.

விடாயாற்றி மூன்று தினங்கள்.

## தேவஸ்தானக் கட்டளைகள்:-

1. முனியம்மாள் கட்டளை; வீடு ஒன்று.

இது, 28, ஐயா முதலி தெரு, சென்னை 1; பிரதிதினம் தீபம், தேசாந்திரி, கிருத்திகை ஸ்தபனம், ஷை அம்மையார் திதிக்கு நடத்துவதற்காக உளது.

2. செங்கல்வராய நாயுடு கட்டளை:-

இது, பொன்னேரி தாலுக்கா, பஞ்செட்டி கிராமத்திலும், தச்சூர் கிராமத்திலுமாக 7 ஏக்கரா 41 செண்டு உளது. இது பிரதி பரணிக்கும், பரதேசிகட்கு மகேஸ்வர பூஜை, தினசரி ஒரு தீபம்; இதற்காக உளது.

3, அரசூர் நடேச முதலியார் கட்டளை.

இது, பொன்னேரி தாலுக்காவில் உள்ள சித்தரச்சூர் கிராமத்தில் 66 செண்டு நிலம்; ஐப்பசி ஸ்கந்த சஷ்டி காலத்தில், காலை சந்தி அபிஷேக வகையரா நடத்த உளது.

4. செஞ்சிராம பிள்ளை வகையரா கட்டளை.

இது, பொன்னேரி தாலூகா, பெரியகரும்பூர் கிராமத்தில் ஒரு ஏக்கரா 7 செண்டு. இது மார்கழி கிருத்திகை உற்சவம் வகையரா நடத்த உளது.

5. கோவிந்தப் பிள்ளை கட்டளை.

இது, பொன்னேரி தாலூகா நெடுவரம்பாக்கம் கிராமத்தில் இரண்டு ஏக்கரா 83 செண்டு. இது, பிரதி பரணி கிருத்திகை, பிரமோற்சவம், ஸ்கந்த சஷ்டிகாலங்களில் பதினெட்டு கிளை விளக்குக்குத் தீபம் போட உளது.

இரத்தின செட்டியார் கட்டளை, தச்சூர் கிராமத்தில் நிலம் 91 செண்டு. இது, பிரதி தினம் கோபுர வாசலில் தீபம் போட உளது.

6. காட்டுப்பள்ளி ஸ்ரீநரசிங்க முதலியார் டிரஸ்ட் கட்டளை.

இது, ஷ தாலூகா, பெரவலூர் கிராமம் 2 ஏக்கரா 4 செண்டு நிலம்; இது தினசரி உச்சிக்காலக் கட்டளை நடத்த உளது.

தேவஸ்தானத்தைச் சேர்ந்த நஞ்சை புஞ்சை நிலங்கள் மொத்தம் 120 ஏக்கர்.

## குறிப்பு.

1. நிலபுலங்களி லிருந்தும், உண்டியல், கட்டணம், காணிக்கை வகையராக்கள் மூலமும், தேவஸ்தான மொத்த வருமானம், ஆண்டொன்றுக்கு சராசரி ரூ. 20000-00

### கட்டணங்கள்:-

| | | | | |
|---|---|---|---|---|
| பிரதி பரணி கிருத்திகையில் பிரவேச கட்டணம் | | | 10 | ந. பை. |
| தீபாராதனைக்கு | டிக்கட் 1-க்கு | | 10 | ,, |
| அர்ச்சனை | ,, | | 25 | ,, |
| காது குத்தல் | ,, | | 25 | ,, |
| முடியிறக்குதல் | ,, | | 50 | ,, |
| காவடி | ,, | ரூ. | 1-00 | ,, |
| திருமணம் | ,, | ரூ. | 5-00 | ,, |
| அபிஷேகம் | ,, | ரூ. | 6-75 | ,, |
| சகஸ்ரநாமம் | ,, | ரூ. | 5-00 | ,, |
| கால்நடை பிரதக்ஷிணத்திற்கு | ,, | ரூ. | 1-00 | ,, |

சேவல் சுற்றிவிட, மற்றப்படி காணிக்கைகள் செலுத்த, அவைகட்கு ஏற்றவாறு கட்டணங்கள் வசூலிக்கப் பெறும்.

## வாகனங்கள்.

1. தங்க நிறமுள்ள மயில் 1
2. அசைந்தாடும் உறுப்புடைய தங்க நிறமுள்ள யானை 1
3. குதிரை வாகனம் 1
4. பச்சை நிற மயில் வாகனம் 1
5. பெருச்சாளி வாகனம் 1
6. சூரபதுமன் பிறதலைகளுடன் 1
7. தங்க நிறமுள்ள தொட்டி 1
8. விக்நேஸ்வரர் விமானம் 1
9. பவழக்கால் விமானம் 1

## முக்கிய அறிவிப்பு.

இத்தலத்தில் 1949–லிருந்து உயர் திரு: கு. செ. ஆறுமுக செட்டியார் ஆலய நிர்வாக தர்மகர்த்தராக இருந்து, இரவும் பகலும் திருப்பணி வளர்க்கும் சிந்தனையில், அருமை முயற்சிகள் பல ஆயிரம் செய்தனர். இதன்வழி மின்சார விளக்கமைத்தல்; ஆண்டுதோறும் பிரம்மோற்சவ காலத்தில் மகேஸ்வர பூசை; கந்தர் சஷ்டியில் 7 நாட்களும் மகேஸ்வர பூசை; 7 நாள் உற்சவம்; பிரதி பிரதோஷம், மாசி கிருத்திகை மகேஸ்வர பூசைகளில் ஆலயத்திற்கு முக்கியமான வழிபாட்டுப் பொருள்களை உதவுதல், நந்தவன திருப்பணி; இவ்வகைகளில் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 2000 த்திற்கும் மேற்பட்டு, 14 ஆண்டுகளாக அவர்கள் செய்திருக்கும் ஆண்டார்குப்பத் திருப்பணி, ஏறக்குறைய 30 ஆயிரம் ரூபாய்களுக்கும் மேற்பட்டுளது. அதனுடன் திருக்குளப்படிக்கட்டுத் திருப்பணியையும் இப்பொழுது ஆரம்பத்திருக்கிறார்கள்.

இவர்கள் மானேஜிங் டிரஸ்டியான பிறகு, இன்று ஆலயம் மிகமிக அற்புதமாக இருக்கிறது. இதற்கு முன்னே இருந்த இடம் தெரியாதிருந்த ஆலயம், வாழ்விக்கும் திருப்பணிகள் வளர்ந்து, இன்று உலகம் அறியும் அளவு உயர்ந்துளது.





திருப்பணித் தொண்டர் திருவலர், ரொணர்த மவுன சுவாமிகள்.



ஸ்ரீ ரு பெ. ஆறுமுக செட்டியார்,
(மானேஜிங் டிரஸ்டி.)



M. குமாரசாமி செட்டியார், B.A.,
ஆரணி.



K. பக்தவச்சலு நாயுடு,
சூளை, சென்னை-7.

(டிரஸ்டிகள்.)

## ஸ்ரீபாலசுப்ரமண்யர் திருமுன்புள்ள சிலாசாஸனம்

சித்திரபானு ஆண்டு 1942ம் ஸு, ஆண்டார்குப்பம் ஸ்ரீ பாலசுப்ரமண்ய ஸ்வாமி க்ஷேத்திரத்தில், பொன்னேரி தாலூகா, காட்டுப்பள்ளி கிராமம், பையூர் கோட்ட வேளாளர் மரபு, தென்னவராய கோத்திரம் கா. நரசிங்க முதலியார் குமாரர் மைனர், கா. ந. ஷண்முக சுந்தர முதலியார் க்ஷேமார்த்தமாக இந்த சோபான மண்டபம் கட்டப்பெற்றது.

இப்படிக்கு.

அரசூர் பார்த்தசாரதி முதலியார், காட்டூர் சுந்தர முதலியார்.

## ஸ்ரீவிசாலாட்சி அம்பாள் சந்நிதி முன் உள்ள சாஸனம்

சித்திரபானு ஸு காத்திகை மாதம் 19உ (4—12—'42) பொன்னேரி தாலூகா ஆரணி ஜமதக்னி மகரிஷி கோத்திரம் தொட்டி சுப்பராய செட்டியார் அபிப்பிராயப்படி, ஷியார் மனைவி வள்ளியம்மாளால் இந்த ஸ்ரீ காசிவிஸ்வநாதர் விசாலாட்சியம்மன் சன்னதிகள் கைங்கர்யம் செய்யப் பெற்றன. இப்படிக்கு,

ஆரணி. தொட்டி சுப்பராய செட்டியார் மனைவி,
வள்ளியம்மாள்,

## ஸ்ரீ ஆறுமுகப் பெருமான் சந்நிதி முன் உள்ள சாஸனம்

சித்திரபானு ஸு கார்த்திகை மீ 19உ (4—12—'42) சென்னை லிங்க செட்டி வீதி 128 நெ. வீடு புஷ்பந்தி மகரிஷி கோத்திரம் புரதகாலி இராமச்சந்திர செட்டியார் குமாரர் குப்புசாமி செட்டியாரால் இந்த ஷண்முகர் சன்னதி கைங்கர்யம் செய்யப்பட்டது. இப்படிக்கு,

குப்புசாமி செட்டியார்.

## ஸ்ரீ நடராஜர் சன்னதி முன் உள்ள சாஸனம்

சித்திரபானு ஸு கார்த்திகை மீ 19உ (4—12—'42) சென்னை சஞ்ஜீவிராயன் கோயில் வீதி 28 நெ. வீடு கார்த்திகேய மகரிஷி கோத்திரம் மாசர்ல அப்பா செட்டியார் குமாரர் மன்னூரு செட்டியாரால் இந்த நடராஜர் சன்னதி கைங்கர்யம் செய்யப் பெற்றது. இப்படிக்கு,

மாசர்ல மன்னூரு செட்டியார்.

## ஸ்தூபி சாஸனம்

குகமயம்.

சுபானு ஹூ ஆனி மீ 30உ (14—7—'43) புதவாரம் இந்த மூலவர் ஸ்தூபி, சென்னை தார்பு செட்டி வீதி, 88 நெ. வீடு இரும்பு வியாபாரம், வாணிப கண்ணுவ மகரிஷி கோத்திரம், கா. ரங்கப்ப செட்டியார் குமாரர், காட்டாவூர் சுப்ரமண்ய செட்டியார் அவர்களால் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பெற்று, நூதன சுதை வேலை சிற்பங்களுடன் திருப்பணி பூர்த்தி செய்விக்கப்பட்டது. இங்ஙனம்,

காட்டாவூர் சுப்ரமண்ய செட்டியார்.

இராஜ கோபுரத்திலும், மூலஸ்தான விமானத்திலும், முக்கியமான கந்த புராணத்தில் உள்ளதும், மற்றும் பல புராணங்களினின்றும் எடுத்துக் காட்டாக உள்ள வரலாற்றின்படி, உயிருள ஓவியங்களாக வர்ண வேலைப்பாடுடன் கண்ணிற்கினிய சுதைச் சிற்பங்களைக் கருத்திற்குரியதாய், பார்ப்பார் மனம் பரவசமடையும்படி திண்டிவனம் ஸ்ரீ நடராஜ முதலியார் என்னும் சிற்பியார் திறம்பட அமைத்துளர்.

திருப்பணிகள் இவைகள் நிறைவேறிய பின், சித்திரபானு ஆண்டு கார்த்திகைத் திங்கள் 19-ஆம் நாள் கோயில் மானேஜிங் டிரஸ்டியான கும்மிடிபூண்டி ஸ்ரீ செங்கல்ராய செட்டியார் குமாரர் ஸ்ரீ ஆறுமுக செட்டியார் அவர்கள் பெயரால், நிர்வாகிகள் கும்பாபிஷேகத்தை மிகச் சிறப்பாக நிறைவேற்றி வைத்தனர்.

## யாகசாலை மண்டப சிலா சாஸனம்

திரு: அ. பார்த்தசாரதி முதலியார், திரு: கு. செ. ஆறுகமு செட்டியார், திரு: மதுராபுரி. ரா. கருப்பஞ் செட்டியார், திரு: K. கோபால் செட்டியார், திரு. காக்கவாக்கம் நாராயணய்யர். இவர்களால் இந்த யாகசாலை கட்டிடம் கட்டப்பட்டது.

இப்படிக்கு,

கு. செ. ஆறுமுக செட்டியார், ப. இரத்தினவேல் முதலியார்

தர்மகர்த்தர்கள்.

## ராஜ கோபுர சிலா சாஸனம்

கருங்கல் கட்டிடம் ஸ்ரீ கா. ந. ஷண்முக சுந்தர முதலியாரால் கட்டப்பட்டது. மேல் ஐந்து நிலைகளையும்

1. திரு: கா. சுப்பிரமணிய செட்டியார்—கந்தசாமி கோவில் தர்மகர்த்தா.
2. திரு: கு. செ. ஆறுமுக செட்டியார்—மானேஜிங் டிரஸ்டி ஆண்டார்குப்பம் தேவஸ்தானம்.
3. திரு: அ. பார்த்தசாரதி முதலியார்.
4. திரு: டி. எம். ஏழுமலை செட்டியார், ஜவுளி வியாபாரம்.
5. திரு: ஏ. எஸ். மாணிக்கம் செட்டியார், வர்ண வியாபாரம்.

இவ் ஐவரும் நன்கொடை வசூல் செய்து 1949-ம் வருஷம் கட்டப்பெற்று. கனம் திரு: M. பக்தவத்சல முதலியார் B.A., B.L., அவர்களால் திறக்கப்பட்டது. 30—10—59.

## திருமடப்பள்ளி சாஸனம்

விரோதி வருஷம், ஆடி மாதம், 4-ந் தேதி (19-7-1949) பொன்னேரி தாலுக்கா, ஊர்ணம்பேடு கிராமம், சோழவாணி மஹாரிஷி கோத்திரம். ஊ. வீரப்ப செட்டியார் குமாரர்கள் (1) ஊ. வடிவேலு செட்டியார், (2) ஊ. துரைசாமி செட்டியார் எனும் இந்த இருவராலும் இந்த மடப்பள்ளி கைங்கர்யம் செய்யப்பட்டது.

இப்படிக்கு,

ஊ. வடிவேலு செட்டியார், ஊ. துரைசாமி செட்டியார்.

## திருமதில் சிலா சாஸனம்

விரோதி வருஷம் ஆடி மாதம் 4-ந் தேதி (19-7-49) பொன்னேரி ஊர்ணம்பேடு சோழவாணி மஹாரிஷி கோத்ரம் ஊ. வீரப்ப செட்டியார் குமாரர்கள் 1. ஊ. வடிவேலு செட்டியார், 2. ஊ. துரைசாமி செட்டியார், கீழண்டை மதில் சுவர் 2, தென்னண்டை மதில் சுவர் 20 அடியும், மடப்பள்ளியும் கட்டப்பட்டது.

இப்படிக்கு,

கு. செ. ஆறுமுக செட்டியார். (Managing Trustee.)

ப. இரத்தினவேலு முதலியார்,
தோ. ச. மு. நடேச செட்டியார்,
(தர்மகர்த்தர்கள்)

## மின்சாரவிளக்கு கைங்கர்ய சாஸனம்

திரு: கலவை. செஞ்சு செட்டியார், திரு: கு. செ. ஆறுமுக செட்டியார் இருவராலும், இராஜகோபுரத்தில் "ஓம்" என்ற மின்சார விளக்குக் கைங்கர்யம் செய்யப்பட்டது இதை கனம் அமைச்சர் திரு: மாணிக்கவேல் நாயகர் அவர்கள் 4—11—'59ல் ஏற்றி வைத்தார்.

## மின்சார பம்பு செட்டு கைங்கர்யம்.

1956–ம் ஆண்டில் சென்னை மாநில அரசினர், நிர்வாக தர்ம கர்த்தா திரு: கு. செ. ஆறுமுக செட்டியார் ஆக இருவருடைய பொருளுதவியால் ஸ்ரீபாலசுப்பிரமணிய சுவாமி நான்கு மாட வீதிகளிலும் சுமார் 10 குழாய்கள் அமைக்கப்பட்டு, மின்சார பம்பு செட்டு உதவியால் தண்ணீர் வசதி செய்யப் பட்டது.

---

சரக்கொன்றை நன்னீழல் அமர்ந்தரு சண்
முகப்பெருமான் சரணம் வாழி
அரக்கனைய நிறமலர்த்தா ளம்மை வள்ளி
தெய்வானை யடிகள் வாழி
அரக்கனுயி ருண்ட அயில் மயில்சேவல்
எந்நாளும் அமர்ந்து வாழி
சிரக்கணி யாண்டார் குப்பத் தலமேவும்
அடியார்கள் சிறந்து வாழி.

---

ஆண்டார்குப்பத் தல வரலாறு நிறைவு பெறுகிறது.

ஸ்ரீபால சுப்ரமண்யப் பரமன் அருளார்
திருவடிகட்கே அடைக்கலம்.

ஓம்.

PRINTED AT THE
SAKTHI PRESS,
TIRUVALLUR.
4—2—1965.